Bishop George Rajendran sdb
DIOCESE OF THUCKALAY

BISHOP'S HOUSE
P.B. No. 12, Thuckalay P.O.
Kanyakumari District - 629175
Tamil Nadu, India

### *BISHOP'S ENGAGEMENTS* – NOVEMBER 2014

| DATE | DAY | TIME | EVENTS |
|---|---|---|---|
| 1 | Saturday | 10. 00 am<br>4.00 pm | Marriage Mass at Palapallam<br>Meeting reg. Deacons with parish priests |
| 2 | Sunday | 8.00 am<br>11.30 am<br>3.00 pm | Mass at Anchugramam<br>College meeting<br>IMS Church World Sunday school day |
| 3 | Monday | 8.00 pm | Jubilee gathering at Marapaddy |
| 4-7 | | | Bishop's House |
| 8 | Saturday | 9.30 am | 18th Diocesan day |
| 9 | Sunday | 9.00 am<br>4.00 pm | Fr. Augustin's Jubilee mass<br>College foundation stone blessing |
| 10 | Monday | <br>6.00 pm | Forane level priest conference<br>Meeting with deacons |
| 11-30 | | | Europe Visit |
| Dec. 1 | | | Returns from Europe |

## BIRTHDAY & FEASTDAY OF REV. FATHERS

### FEASTDAY

FR. CHRISTUDAS : NOVEMBER 25

### BIRTHDAY

FR. JOSEPH OTTALANKAL MST : NOVEMBER 17

FR. JOHN THEKKEL : NOVEMBER 20

**இறையருள் செய்திகள் மற்றும் விமர்சனங்களுக்கு**
***iraiarultkly@gmail.com***



# இறையருள்
# IRAIARUL
THE OFFICIAL ORGAN OF THE DIOCESE OF THUCKALAY
**Volume 18 No : 11** **November 2014**

## *Editorial Board*

*Patron*
His Excellency
**Mar George Rajendran**
*Chief Editor*
**Fr. Joseph Santhosh**
*Executive Editor*
**Mr. Soundara Raj**
*Associate Editors*
**Fr. K.J Antony sdb**
**Mr. Edwinson**
**Mr. Berlin Athencod**

Published by
**Fr. Joseph Santhosh**
**Bishop's House**
**Post Box No . 12**
**Thuckalay - 629 175**
**K.K.Dist,Tamil Nadu,India.**

Printed at
**Pulari Offset Press**
**Thuckalay.**
**Ph:04651-252570**

## உள்ளே...

| | |
|---|---|
| உரோமிலிருந்து... | 2 |
| ஆயர் திருமுகம் | 4 |
| அருட்பணிப் பேரவை | 16 |
| குழந்தை ஈசோ | 19 |
| சிறுமலர் | 21 |
| இளைஞர் இயக்கம் | 22 |
| நற்செய்தி நிலையம் | 24 |
| இல்வாழ்வு இயக்கம் | 26 |
| மரியாயின் சேனை | 28 |
| வின்செண்ட் தே பவுல் சபை | 30 |
| திருப்பணியாளர் பயிற்சி | 33 |
| சபை நாள் காணிக்கை | 34 |
| வலை தளம் | 35 |
| ஹோம் மிஷன் | 36 |
| ஆயரோடு... | 39 |
| கல்விப் பணித்தளம் | 40 |
| விழுதுகள்-3 | 42 |
| வரலாற்றுச் சுவடுகளில்-7 | 45 |
| Birthdays & Feast Days | 48 |

# திருத்தந்தையிடமிருந்து..

புனிதர்களுடனான ஒன்றிப்பு, திருமுழுக்கால் கிறிஸ்துவுக்கு உரியவர்களாக மாறியிருக்கும் எல்லாரையும் ஒன்றிணைக்கின்றது, இந்த ஆன்மீகப் பிணைப்பு மரணத்தால் உடைக்கப்படாது, ஆனால் அது மறுவாழ்விலும் தொடரும் என்று திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் கூறினார்.



அனைத்துப் புனிதர்கள் பெருவிழாவாகிய நவம்பர் 1 சனிக்கிழமை நண்பகலில் மூவேளை செப உரை வழங்கிய திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், இப்பூமியில் பயணம் செய்யும் திருஅவையும், விண்ணக எருசலேமும் ஒரே மாபெரும் குடும்பம் என்பது பற்றி விளக்கினார்.

இப்பெருவிழா திருவழிபாடு இந்த ஆன்மீகப் பிணைப்புப் பற்றிப் பேசுகின்றது என்றும், எல்லாக் காலங்களின் எண்ணற்ற தூய ஆண்கள் மற்றும் பெண்களுக்காக இன்று நாம் இறைவனைப் புகழ்கின்றோம், இவர்கள் சிலவேளைகளில் உலகுக்குக் கடைசியானவர்களாகவும், அதேநேரம் இறைவனுக்கு முதன்மையானவர்களாகவும் இருந்துள்ளனர் என்றும் விண்ணகத்திற்கும் மண்ணகத்திற்கும் இடையேயுள்ள இந்த அழகான பிணைப்பு திருவழிபாட்டில் மிக உயர்ந்த மற்றும் மிக ஆழமான விதத்தில் இடம்பெறுகின்றது. சிறப்பாக, திருஅவையின் அங்கத்தினர்களுக்கிடையே ஆழமான ஒன்றிப்பை வெளிப்படுத்தி நிறைவடையச் செய்யும் திருநற்கருணைக் கொண்டாட்டத்தில் இது வெளிப்படுகின்றது என்றும் உரைத்தார் திருத்தந்தை.

நவம்பர் மாதத்தின் முதல் இரண்டு நாள்கள், நம் அனைவருக்கும் வாழ்வின் இறுதிக் காரியங்கள் பற்றிய



விசுவாசத்தின், செபத்தின், சிந்தனையின் ஆழமான நேரங்களாகும். உண்மையில் புனிதர்களின் பெருவிழாவையும், இறந்த அனைத்து விசுவாசிகளின் நினைவையும் நாம் திருவழிபாட்டில் சிறப்பிக்கும்போது, இவ்வுலகில் வாழும் திருஅவைக்கும், விண்ணில் வாழும் திருஅவைக்கும் உள்ள பிணைப்பை உணருகின்றோம் என்றும் கூறினார் திருத்தந்தை பிரான்சிஸ்.

## அருளாளர் ஜோசப் வாஸ் புனிதராக அறிவிப்பு :

சனவரி 14ம் தேதி அருளாளர் ஜோசப் வாஸ் அவர்களை, புனிதராக அறிவிக்கவுள்ளார் திருத்தந்தை பிரான்சிஸ். 2015ம் ஆண்டு சனவரி 13ம் தேதி இலங்கையில் திருப்பயணத்தைத் தொடங்கும் திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், 14ம் தேதி காலையில் நிகழ்த்தும் திருப்பலியில் அருளாளர் ஜோசப் வாஸ் அவர்களை, புனிதராக அறிவிக்கவுள்ளார்.

இந்தியாவின் கோவா மாநிலத்தில் Benaulimல் 1651ம் ஆண்டு ஏப்ரல் 21ம் தேதி பிறந்த அருளாளர் ஜோசப் வாஸ் அவர்கள், 1711ம் ஆண்டு சனவரி 16ம் தேதி கண்டியில் காலமானார். இலங்கையில் டச்சுக்காரர்களின் ஆக்ரமிப்பின்போது கால்வனிசக் கிறிஸ்தவம் அரசு மதமாக அறிவிக்கப்பட்டது. அதனால் கத்தோலிக்கர் கடுமையாய் நசுக்கி ஒடுக்கப்பட்டனர். அச்சமயத்தில் கத்தோலிக்கருக்கு உதவுவதற்காக இலங்கை சென்றார் அருளாளர் ஜோசப் வாஸ். இவர் இலங்கையில் கத்தோலிக்க விசுவாசத்தை நிலைநாட்டுவதற்குக் கடுமையாய் உழைத்தார். இவர் இலங்கையின் திருத்தூதர் எனவும் அழைக்கப்படுகிறார். 1995ம் ஆண்டு சனவரி 21ம் தேதி புனித திருத்தந்தை 2ம் ஜான் பால் அவர்கள் கொழும்புவில் அருள்பணி ஜோசப் வாஸ் அவர்களை அருளாளராக உயர்த்தினார். 2015ம் ஆண்டு சனவரி 14ம் தேதி திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களால் புனிதராக அறிவிக்கப்படவுள்ளார் அருளாளர் ஜோசப் வாஸ்.



# ஆயர் திருமுகம்

ஈசோ மெசியாவில் அன்புக்குரிய அருள்தந்தையர்களே, அருள்சகோதரிகளே, அன்பு சகோதர சகோதரிகளே,

நம் தந்தையாம் கடவுளிடமிருந்தும், ஆண்டவராம் ஈசோ மெசியாவிடமிருந்தும் அருளும் அமைதியும் உரித்தாகுக.

உலக திருத்தொண்டு ஞாயிறு அனுசரிக்கும் இந்நாளில் திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் நமக்குக் கூறும் செய்திக்கு செவிமடுத்து உலகெங்கும் மேற்கொள்ளப்படும் திருத்தொண்டுப் பணிகளுக்காக செபிப்போம். வறுமை, போர், பல்வேறுவிதமான ஒடுக்குதல்களுக்கு ஆளாயிருக்கும் பலகோடி மக்கள் இயேசுவின் அன்பையும் மகிழ்ச்சியையும் அனுபவிப்பதற்கு, நாம் மேற்கொள்ளும் செபங்களும் நாம் அளிக்கும் காணிக்கைகளும் பேருதவியாக இருக்கும். இயேசுவின் அன்பு அனைவரும் அனுபவிக்க நாம் அனைவரும் திருத்தொண்டு பணியாளர்களாக வாழ்வதற்கான அடிப்படை அழைப்பைப் பெற்றிருக்கிறோம்.

அன்பான சகோதரர் சகோதரிகளே,

இயேசுவைக்குறித்த நற்செய்தி உலகின் பெரும்பான்மையான மக்களை இன்னும் சென்றடையவில்லை. அதனாலேயே உலக மக்களுக்கு நற்செய்தி அறிவிக்க வேண்டியது காலத்தின் கட்டாயமாக நிற்கிறது. திருச்சபையின் உறுப்பினர்கள் ஒவ்வொருவரும் திருத்தொண்டுப்பணியாளர்களாக வாழ அழைப்பைப் பெற்றிருக்கிறார்கள்; காரணம், திருச்சபை தனது இயல்பால் திருத்தொண்டை சார்ந்துள்ளது. நாம் ஒவ்வொருவரும் திருத்தொண்டுப் பணி புரிய அழைப்பைப் பெற்றிருக்கிறோம். திருத்தொண்டு ஞாயிறு என்பது, பல்வேறு கண்டங்களில் வாழும் விசுவாசிகள் அனைவரும் ஒரே மனதுடன் இணைந்து, உலகின் பல பகுதிகளில் முளைத்து, வளர்ந்து வரும் இளம் கிறிஸ்தவ சமூகங்களுக்காக, செபிக்கவும் சகோதரத்துவ அன்பை பகிர்ந்து கொள்ளவும் தரப்பட்டிருக்கும் அரிய வாய்ப்பு. அருள்வாழ்வின் அகமகிழ்ச்சியை பகிர்ந்து கொண்டாடும் நாள். தந்தைக் கடவுளால் அனுப்பப்பட்ட தூய ஆவியின் ஏவுதலுக்கு கீழ்ப்படிந்து வாழும் அனைவருக்கும் அவர் ஞானத்தையும் ஆற்றலையும்



கொடுப்பதனாலேயே நாம் இதை அருள்வாழ்வின் கொண்டாட்டம் என்கிறோம். தந்தைக்கடவுளால் உலகிற்கு அனுப்பப்பட்ட மகனாகிய இயேசு நாம் மேற்கொள்ளும் திருத்தொண்டுப்பணிகளில் உடனிருந்து உதவுகிறார். அதனால் இதை அகமகிழ்ச்சியின் கொண்டாட்டம் என்கிறோம். நற்செய்தி அறிவித்துவிட்டு திரும்பி வரும் சீடர்களிலும் அவர்களை வரவேற்கும் இயேசுவிலும் இம்மகிழ்ச்சியை நாம் காண்கிறோம். லூக்கா நற்செய்தியில் காணக்கிடக்கும் இக்காட்சியைக் குறித்து சற்றே விளக்கமாக கூறுகிறேன் (லூக் 10, 21-23).

1. ஆண்டவர் எழுபத்திரண்டு பேரை தேர்ந்தெடுத்து இருவர் இருவராக தாம் செல்ல இருந்த எல்லா ஊர்களுக்கும் இடங்களுக்கும் இறையரசைக் குறித்த நற்செய்தி அறிவிக்க அனுப்பி வைக்கிறார். தங்களிடம் ஒப்படைக்கப்பட்ட பணியை முடித்து விட்டு பெரும் மகிழ்ச்சியுடன் அவர்கள் திரும்பி வருகிறார்கள்; முதல் திருத்தொண்டுப்பணி நிறைவடையும் போது மகிழ்ச்சியே மேலோங்கி நிற்கும் கருத்தாக நாம் காண்கிறோம். ஆயினும் இயேசு கூறுகிறார்: "தீய ஆவிகள் உங்களுக்கு அடிபணிகின்றன என்பது பற்றி மகிழ வேண்டாம். மாறாக, உங்கள் பெயர்கள் விண்ணகத்தில் எழுதப்பட்டிருக்கின்றன என்பது பற்றியே மகிழுங்கள். அந்நேரத்தில் இயேசு தூய ஆவியால் பேருவகையடைந்து, தந்தையே... உம்மை போற்றுகிறேன்..." பிறகு சீடர்களிடம் திரும்பி, "நீங்கள் காண்பவற்றைக் காணும் வாய்ப்புப் பெற்றோர் பேறுபெற்றோர்" என்றார் (லூக் 10,20-21). கடவுள் 'மறைத்து', 'வெளிப்படுத்தினார்' என்று இப்பகுதியில் நாம் காணும் இருவார்த்தைகளுள் 'வெளிப்படுத்தினார்' என்னும் வார்த்தையே இச்செபத்தில் அழுத்தம் பெறுகிறது. எதை கடவுள் மறைத்து வெளிப்படுத்தினார்? என்னும் கேள்வி இங்கே எழுகிறது. இக்கேள்விக்கு, இறையரசின் மறைபொருள், இயேசுவின் இறைத்தன்மை, சாத்தானின் மீதான வெற்றி ஆகியவை பதிலாக அமைகின்றன.

லூக்கா நற்செய்தியாளர் மூன்று காட்சிகளை நம்முன்னால் படம்பிடித்துக் காட்டுகிறார். அவையாவன, முதலில் இயேசு சீடர்களிடம் பேசுகிறார், பிறகு தந்தைக்கடவுளிடம் பேசுகிறார் மறுபடியும் சீடர்களிடம் பேசுகிறார். தாங்கள் இதுவரை அனுபவத்தறியாத முற்றிலும் மாறுபட்டதும் மேலானதுமான

இம்மகிழ்ச்சியை சீடர்கள் முழுமையாய் தங்களுக்குள்ளே பகிர்ந்து கொள்ள இயேசு விரும்புவதாகவே நற்செய்தியாளர் சுட்டிக்காட்டுகிறார்.

2. தீய ஆவிகள் அடிபணிய வைக்கும் ஆற்றலை தாங்கள் கொண்டுள்ளதைக் குறித்து சீடர்கள் வியந்து, அம்மகிழ்ச்சியால் நிறைந்தவர்களாக காணப்படுகிறார்கள். உடனே இயேசு அவர்களுக்கு முன்னெச்சரிக்கையாக கூறுகிறார், தாங்கள் பெற்றிருக்கும் வலிமையைக் குறித்து மகிழ்ச்சி கொள்ளாமல், தாங்கள் பெற்றிருக்கும் அன்பைக்குறித்து அகமகிழ அழைக்கிறார். நற்செய்தி கூறுகிறது, "உங்கள் பெயர்கள் விண்ணகத்தில் எழுதப்பட்டிருக்கின்றன" (லூக் 10:20). சீடர்கள் கடவுளின் அன்பை அனுபவிக்க வாய்ப்புப் பெற்றதோடு, அதை பகிர்ந்து கொள்வதற்கான வாய்ப்பையும் பெறுகிறார்கள். இயேசுவின் இதயத்தை மகிழ்ச்சியும் நன்றியுணர்வும் ஆட்கொள்ள இதுவே காரணமாகிறது. மூவொரு இறைமையில் திகழும் சமூக உறவின் அடிப்படையில் இம்மகிழ்ச்சியின் கொண்டாட்டத்தை லூக்கா நற்செய்தியாளர் விவரிக்கிறார், அவை இரண்டு. முதலாவதாக "இயேசு தூய ஆவியால் பேருவகை அடைந்தார்," இரண்டாவதாக 'தந்தைக் கடவுளை போற்றினார்.' தந்தையோடு இயேசு கொண்டிருக்கும் மிக நெருக்கமான மகனுக்குரிய அன்புறவிலிருந்தே இம்மகிழ்ச்சியின் வெளிப்பாடு வருகிறது. இயேசு கூறுகிறார், "தந்தையே விண்ணுக்கும் மண்ணுக்கும் ஆண்டவரே, உம்மைப் போற்றுகிறேன், ஏனெனில் ஞானிகளுக்கும் அறிஞர்களுக்கும் இவற்றை மறைத்து, குழந்தைகளுக்கு வெளிப்படுத்தினீர்" (லூக் 10,21).

தாங்கள் நிறைவானவர்கள் என்றும் அனைத்து அறிவுகளும் தங்களுக்குள் அடக்கம் என்று நம்புவர்களுக்கு கடவுள் ஞானத்தை மறைக்கிறார். அறிவின் ஆணவத்தால் கடவுளுக்கு எதிராக வாசலை அடைக்கும் பார்வையற்றவர்கள் இவர்கள். இயேசுவின் காலத்தில் வாழ்ந்தவர்கள் இத்தகைய ஆணவம் படைத்தவர்களாக இருந்தார்கள் என்று நாம் விளக்கம் அளித்து தப்பிக்கப் பார்க்கலாம், ஆனால், இது இன்றும் தொடர்கிறது என்பதே உண்மை. "பேறுபெற்றவர்கள்" என இயேசு அறிவித்த, எளியோர், ஏழையர், ஒதுக்கப்பட்டோர், உரிமை இழந்தோர், சுமைகளால் சோர்ந்திருப்போர் ஆகியோரே விவிலியம் சுட்டிக்காட்டும் "சின்னஞ்



சிறியவர்கள்." தாய் மரியாள், தூய யோசேப்பு, தாம் நற்செய்தி அறிவிக்கும் வேளையில் தம்மோடு அழைத்து இணைத்துக் கொண்ட கலிலேய கடலோர மீனவர்களும் சீடர்களும் "சின்னஞ்சிறியவர்கள்" என்னும் வார்த்தைக்கு எடுத்துக்காட்டுகளாக நம் மனக்கண் முன் வருகிறார்கள்.

3. "ஆம் தந்தையே, இதுவே உமது திருவுளம்" (லூக் 10:21). இயேசு தமது உள்ளுக்குள் அனுபவித்த பேருவகையின் வெளிப்பாடாக நாம் இவ்வார்த்தைகளை காணலாம். கடவுளின் மாபெரும் மீட்புத்திட்டத்தையே "திருவுளம்" என்னும் வார்த்தை நமக்கு உணர்த்துகிறது. மகனை அன்பு செய்யும் அதே அளவில் உலகினரையும் அன்பு செய்யும் தந்தைக்கடவுளின் திருவுளத்தை குறித்து நினைத்து இயேசு பேருவகை அடைகிறார். இதே உணர்வை மரியாவின் பாடலின் வழியாக லூக்கா உணர்த்துகிறார்: "ஆண்டவரை எனது உள்ளம் போற்றிப் பெருமைப் படுத்துகின்றது. என் மீட்பராம் கடவுளை நினைத்து எனது மனம் பேருவகை கொள்கின்றது" (லூக் 1:47). இதுவே மீட்புக்கு வழிவகுக்கும் நற்செய்தி. நற்செய்தி பரப்புதலின் மிகப்பெரும் மாதிரியான தாய் மரியா, இயேசுவை வயிற்றில் சுமந்தவளாக, நீண்ட தூரம் பயணம் செய்து எலிசபத்தம்மாளை சந்தித்து தூய ஆவியால் அகமகிழ்ந்து பேருவகையின் பாடலை பாடினாள். இயேசுவும், சீடர்களின் நற்செய்திப்பணியின் வெற்றியையும் அதனால் அவர்களுக்குள் உருவாகிய மகிழ்ச்சியையும் கண்டு, தூய ஆவியால் நிறைந்தவராக தந்தைக் கடவுளைப் செபத்தின் வழியாக போற்றுகிறார். மீட்புக்காக உழைக்கும் போது ஏற்படும் மகிழ்ச்சி; தந்தைக்கடவுள் மகனாகிய இயேசுவின் மீது செலுத்தும் அன்பு அதே அளவில் நம்மீது இறங்கி வரும் உன்னதம்; மேலும் தூய ஆவி நம்மை மூவொரு இறைவனின் உடனுறைவால் நிரப்பி, அவ்வாழ்வில் பங்கேற்கச் செய்யும் அருள், ஆகியவற்றை இவ்விரு நிகழ்வுளின் வழியாக நாம் காண்கிறோம்.

மகிழ்சியின் ஊற்றுத் தந்தைக்கடவுள் என்றால், மகனாகிய இயேசு அதன் வெளிப்பாடு, தூய ஆவியோ அம்மகிழ்ச்சியை நமக்குத் தருபவர். தந்தையைப் போற்றிய பிறகு, "பெருஞ்சுமை சுமந்து சோர்ந்திருப்பவர்களே, எல்லாரும் என்னிடம் வாருங்கள், நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன். நான் கனிவும்

மனத்தாழ்மையும் உடையவன். ஆகவே என் நுகத்தை உங்கள்மேல் ஏற்றுக்கொண்டு என்னிடம் கற்றுக்கொள்ளுங்கள்" (மத் 11: 28,29) என்று இயேசு கூறியதாக மத்தேயு நற்செய்தியாளர் நமக்கு சுட்டிக்காட்டுகிறார். இயேசுவை கண்டடையும் ஒவ்வொருவருடைய உள்ளங்களையும் நற்செய்தியின் மகிழ்ச்சி ஆட்கொள்கிறது. அவரளிக்கும் மீட்பை ஏற்றுக்கொள்ளும் ஒவ்வொருவரும் பாவத்திலிருந்தும் துயரத்திலிருந்தும், அகவெறுமையிலிருந்தும் தனிமையிலிருந்தும் விடுவிக்கப்படுகிறார். "இயேசுவோடு இணைந்திருக்கையில் மகிழ்ச்சி நிரந்தரம் புதுப்பிக்கப்படுகிறது" (நற்செய்தியின் மகிழ்ச்சி, 1). தாய் மரியா இயேசு தரிசனத்தை சிறப்பான விதத்திலே பெற்றாள், அதுவே மகிழ்ச்சியின் காரணமுமாயிற்று. சீடர்களும் இயேசுவின் அழைப்பைப் பெற்று நற்செய்தி பறைசாற்றுவதற்காக அவரால் அனுப்பப்படுகிறார்கள் (மாற் 3:14), அதுவே அவர்களுக்கு மகிழ்ச்சியையும் அளிக்கிறது. நாமும் இம்மகிழ்ச்சி வெள்ளத்தில் நனைந்தால் தான் என்ன?

4. "பேராசை கலந்த மெத்தன வாழ்வு பரிசளித்த தனிமையும் கவலையும், அற்பசுகங்களை அடைவதற்கான பரபரப்பான ஓட்டமும், மழுங்கிப்போன மனசாட்சியும், நுகர்வுகலாச்சாரம் புரையோடியிருக்கும் இன்றைய உலகின் மிகப்பெரிய ஆபத்துகள் எனலாம்" (நற்செய்தியின் மகிழ்ச்சி, 2). இயேசு கொணர்ந்த மீட்பை மானிடர் பற்றிக்கொள்ள வேண்டியது அவசியமாகிறது. இயேசுவின் அன்பால் ஆட்கொள்ளப்படுவதற்கும், இறையரசை குறித்த ஆர்வத்தால் பற்றியெரியவும், நற்செய்தியை அறிவிப்பதால் ஏற்படும் மகிழ்ச்சியால் நிறையவும் தங்களையே விட்டுக்கொடுப்பவர்களே சீடர்கள். நற்செய்தியின் மகிழ்ச்சியை தங்களுக்குள் வளர்த்துக்கொள்ள இயேசுவின் சீடர்கள் அழைக்கப்படுகிறார்கள். இயேசுவின் நற்செய்தியை தலையாய கடமையாகக் கொண்டுள்ள ஆயர்கள், தலத்திருச்சபையில் திருத்தொண்டுப்பணிகளை ஒருங்கிணைத்து முன்னெடுப்பதை தங்கள் முதல் பணியாகக் கொள்ள வேண்டும். இயேசுவின் நற்செய்தி மிகவும் அவசியமாக தேவைப்படும் விளிம்புநிலை மக்களுக்கும் தொலைதூர மக்களுக்கும் திருத்தொண்டு புரிவதில்தான் நற்செய்தி அளிக்கும் மகிழ்ச்சி அடங்கியிருக்கிறது என்பதை ஆயர்கள் உணர்ந்து பணியை மேற்கொள்ளட்டும்.



குருக்களாகவும் துறவறத்தாராகவும் வாழ அழைப்பை ஏற்கும் இளையோரின் எண்ணிக்கை பல நாடுகளின் குறைந்து வருகிறது. பிறரை ஈர்த்து வாழ்வில் பாதிப்பை ஏற்படுத்தும் வகையில் திருத்தூதுப்பணியின் மீதான உற்சாகம் கிறிஸ்தவ சமூகங்களில் இன்று காணக்கிடைப்பதில்லை, இதுவே இறையழைத்தல் குறைந்திடக் காரணம். இயேசு தரிசனத்திலும், ஏழையரோடு நமக்கென இருப்பதை பகிர்வதிலும் தான் நற்செய்தியின் மகிழ்ச்சி அடங்கியிருக்கிறது. கிறிஸ்தவ அன்பை ஏந்தி, பின்தங்கியவர்கள் மீதான அக்கறையை முதன்மை பணியெனக் கொண்டு, பிணைப்புமிக்க சகோதரத்துவ சமூகமாக வாழ பங்கு சமூகங்களையும் பக்த சங்கங்களையும் மற்று கிறிஸ்தவ இயக்கங்களையும் நான் கேட்டுக்கொள்கிறேன். எங்கே மகிழ்ச்சியும் பிறரை கிறிஸ்துவின்பால் கொண்டுவர வேண்டும் என்ற ஆர்வமும் இருக்கிறதோ அங்கே இறையழைத்தல்கள் உருவாகும். பொதுநிலையினரின் அடையாளத்தைக்குறித்தும் திருத்தொண்டுப்பணி மேற்கொள்வதில் அவர்களுக்கென இருக்கும் பங்கைக்குறித்தும் இன்று பெரும் விழிப்புணர்வு ஏற்பட்டிருக்கிறது. ஆதலால் திருதொண்டுப்பணியில் அவர்களை ஈடுபடுத்திட பயிற்சிகள் அளிக்கப்பட வேண்டும்.

5. "முகமலர்ச்சியோடு கொடுப்பவரே கடவுளின் அன்புக்கு உரியவர்" (2கொரி 9,7). திருத்தொண்டுப்பணியில் மகிழ்ச்சியோடு பங்கேற்பதற்கான ஆர்வத்தையும் கட்டாயத்தையும் தூண்டியெழுப்பவதற்கான அரிய வாய்ப்பாக திருத்தொண்டு ஞாயிறைக் காண வேண்டும். தங்களது வாழ்வை கடவுளுக்கும் பிறருக்கும் சுயமாக அர்ப்பணிக்கும் ஒரு அடையாளமாக நீங்கள் ஒவ்வொருவரும் மேற்கொள்ளும் பொருளுதவியானது இருக்கிறது. அன்பின்மீது கட்டியெழுப்பிய மானிட சமூகம் உருவாக்கும் நற்செய்தி அறிவிப்புப் பணியை மேற்கொள்ள உங்கள் பொருளதவி பேருதவியாக அமையும்.

அன்பான சகோதரர் சகோதரிகளே, உலக திருத்தொண்டுதினம் அனுசரிக்கும் இந்நாளில் எனது பார்வை தலத்திருச்சபைகளின்பால் திரும்புகிறது. நற்செய்தியின் மகிழ்ச்சியை நாம் தொலைக்காமல் பத்திரமாக பாதுகாப்போம். நற்செய்தின் மகிழ்ச்சியில் உங்களையே நனைத்துக்கொள்ளுங்கள், நீங்கள்

பெற்றிருக்கும் அழைப்பையும் பணியையும் அன்பால் ஒளிர்வித்துக்கொள்ளுங்கள். முதலில் இயேசுவின் அன்பை நீங்கள் அனுபவித்து சுயபரிதாபத்தை ஏற்படுத்துவதற்காக அல்ல மாறாக. முதல் அனுபவம் தந்த மகிழ்ச்சியை புதிப்பித்து அதிலே நிலைத்திருப்பதற்காக. இயேசுவின் உடனிருப்பை அவரது சீடர்கள் உணர்ந்த வேளைகளிலெல்லாம் மகிழ்ச்சியில் திளைத்திருந்தார்கள்; அவரது திருவுளத்தை நிறைவேற்றி, தங்களது, விசுவாசத்தையும், நம்பிக்கையையும் அன்பையும் பகிர்ந்து கொண்டார்கள்.

எளியவளாய் பேருவகையோடு நற்செய்தியின் பணியாளராக மாறிய தாய் மரியாவின் பரிந்துரைக்காக தாய் திருச்சபையை விட்டுக்கொடுப்போம். அனைவரையம் வரவேற்கும் தாய்வீடாகவும், உலகத்திற்கு புதுவாழ்வளிக்கும் ஊற்றை தன்னகத்தேக் கொண்ட தாயாகவும் திருச்சபை விளங்க இயேசுவின் தாய் மரியா பரிந்துரை புரிவாளாக!

அனைவரையும் இயேசுவின் தாய் மரியா வழியாக இறைவன் நிறைவாய் ஆசிர்வதிப்பாராக

**மார் ஜார்ஜ் இராஜேந்திரன்**

*தக்கலை மறைமாவட்ட ஆயர்*

## உறவிய பணியாளர்கள் பயிற்சி

உறவிய பணியாளர்களுக்கான ஒருநாள் பயிற்சி அக்டோபர் 25 சனிக்கிழமை அன்று கல்லுவிளை ஆசீர் அரங்கத்தில் காலை 9.00 மணி முதல் மாலை 3.30 மணி வரை நடைபெற்றது. குருகுல முதல்வர் பேரருட்தந்தை ஜோஸ் முட்டத்துப்பாடம் அவர்கள் குத்துவிளக்கேற்றி தொடங்கி வைத்தார். காரோடு தூய சூசையப்பர் ஆலய பங்குத்தந்தை அருட்தந்தை தாமஸ் தக்கலை, இளைஞர் இயக்குநர் அருட்தந்தை பெலிக்ஸ், பத்துகாணி அரசு துவக்கப்பள்ளி தலைமையாசிரியர் திரு.வென்சஸ்லாஸ் ஆகியோர்கள் பயிற்சிகளை நடத்தினார்கள். மொத்தம் 255 உறவிய பணியாளர்கள் கலந்து கொண்டனர்.

அருட்தந்தை ஆன்டணி சிறக்கல் VC,
உறவிய இயக்குநர்.



# ஆயர் திருமுகம்

ஈசோ மெசியாவில் அன்புக்குரிய அருள்தந்தையர்களே, அருள்சகோதரிகளே, அன்பு சகோதர சகோதரிகளே,

நம் தந்தையாம் கடவுளிடமிருந்தும், ஆண்டவராம் ஈசோ மெசியாவிடமிருந்தும் அருளும் அமைதியும் உரித்தாகுக.

19ஆம் நூற்றாண்டில் வாழ்ந்தவராயினும் பல நூற்றாண்டுகளை முன்னில் கண்டவராய், நமது சீரோ மலபார் சபையின் ஆன்மீக பாதைக்கு அடித்தளம் அமைத்த சாவரா அடிகளார் புனிதர்களின் சங்கமத்தில் சேர்க்கப்படும் இவ்வேளையில் இப்புனிதரின் ஆன்மீக வழித்தளத்தில் திவ்விய நற்கருணையின் மீதான பற்றினையும் அதன் சக்தியையும் நமது தியானச் சிந்தனையாக தெரிந்தெடுப்பது மிகவும் பயனுள்ளதாகும் என எண்ணுகிறேன். சாவறா அடிகளார் பற்பல சமுதாய முன்னேற்ற திட்டங்களுக்கு ஆரம்பம் குறித்தாலும் அவற்றின் பின்னால், அவருக்கு தூண்டுகோலாக இருந்தது அவருடைய ஆக்கபூர்வமான ஆன்மீக வாழ்க்கை தான் என்பதை எவராலும் புறம் தள்ளிவிட முடியாது. சமுதாய சீர்திருத்தவாதி என்றும் புத்துணர்ச்சியின் வேந்தன் என்றும் அவர் பலராலும் அழைக்கப்படுகிறார் என்றாலும் அத்தகைய செயல்பாடுகளெல்லாம் அவரின் ஆன்மீக வாழ்க்கையின் பொலிவினை எடுத்துக்காட்டுகின்ற வெளி அடையாளங்கள் மட்டும் தான் என்பதில் ஐயமில்லை.

சாவறா அடிகளார் என்ற புனித வேந்தரைக் குறித்து முழுமையாக ஒருவர் புரிந்துகொள்ள விரும்பினால் அவரின் ஆன்மீகத்தைக் குறித்து முதலில் மனனம் செய்யவேண்டும் என்பதில் எவ்வித சந்தேகவுமில்லை. சாவறா தந்தை அவர்களின் ஆன்மீகத்தின் உள்காம்பு என்பது திவ்விய நற்கருணை மீது அவர் கொண்டிருந்த பக்தி தான். இருள் இளங்காலையாகும் நேரம் வரை தனது கண்களை நற்கருணை மீது பதித்து தியானமும் ஆராதனையும் செய்து சக்தி அடைந்து பகல் மாலையாகும் வரை சேவை மனப்பான்மையுடன் அயராது பாடுபடும் அருட்தந்தை சாவறாவைத்தான் ஆசிரம உறுப்பினர்களும் அன்றைய

பொதுமக்களும் கண்டிருந்தனர். சாவறா தந்தையின் ஆத்மானுதாபம் என்ற நூலில் தான் அவரது படைப்புகளிலே மிகவும் முக்கியமானது இதன் உள்ளடக்கம் முழுவதும் அவர் நற்கருணை மீது கொண்ட பக்தியில் நின்று உருகொண்டதாகும்.

நற்கருணை பேழையின் முன் தன்னை மறந்து தியானத்தில் ஆழ்ந்த நிமிடங்களில் தந்தையாகிய கடவுளை பார்த்து "அப்பா" என்று அன்போடு அழைத்து, "உம் மகனைப் பார்க்கும் போது, என் அப்பா உமது அன்பின் எல்லை என்னை அதிசயமடையச் செய்கின்றது," என்ற வீரியமிகுந்த தியானக்கருத்துக்களை ஆத்மானுதாபம் என்ற நூலில் சாவறா தந்தை குறிப்பிட்டுள்ளார். திவ்விய நற்கருணை தருகின்ற வெப்பக்காற்றை அனுபவமாக்கி ஆசிரம உறுப்பினர்களை அவர் எப்பொழுதும் ஆர்வமடையச் செய்தார். அவரின் ஆன்மீக வாழ்க்கையின் உந்து சக்தியாக இருந்தது திவ்விய நற்கருணை மீது அவர் கொண்டுள்ள பக்தியாகும்.

திவ்விய நற்கருணை பக்தியிலிருந்து சாவறா அடிகளார் பெறுகின்ற உணர்வின் ஆக்கத்தின் அனுபவம் மற்றுள்ளவர்களுக்கு பகிர்ந்து கொடுப்பதில் அடிகளார் அதிக கவனம் செலுத்தியிருந்தார். சுறியானி கிறிஸ்தவ சபையில் திவ்விய நற்கருணை ஆராதனை கட்டாயமாக நடத்தப்பட வேண்டுமென முதலாவதாக கருத்திட்டு செயல்படுத்திவர் சாவறா அடிகளார் தான்.

திருவிழா நாட்கள் மற்றும் சிறப்பு அவசரங்களிலும் நமது பங்கு தேவாலயங்களில் எல்லாம் 40 மணி நேரம் ஆராதனையும் திவ்விய நற்கருணை பவனியும் நடைபெற்று இருந்தன. இன்றும் நாம் தொடர்ந்து செயல்படுத்தி வருகின்ற திவ்விய நற்கருணை மீதுள்ள பக்திக்கு ஆரம்பம் குறித்தது சாவறா அடிகளாவர்.

ஈசோவின் மறைபேருண்மைகளை முழுமையாக திவ்விய நற்கருணையில் காண சாவறா தந்தை முயற்சி செய்திருந்தார். ஈசோயுடைய பிறப்பு முதல் விண்ணேற்பு வரையுள்ள ரகசியங்களையும் அவருடைய 2வது வருகையுமெல்லாம் திவ்விய நற்கருணை ஆராதனையின் கருத்துக்களாக இருந்தன. சிறு குழந்தையின் இதய தூய்மையுடனும் கபடமற்ற அன்புடனும் திவ்விய நற்கருணை பேழையின் முன் உட்கார்ந்து இயேசுவோடு



உரையாடல் செய்த சாவறா அடியாரின் ஆன்மீகம் இந்த காலகட்டத்தில் வாழ்ந்துவரும் நாம் அனைவருக்கும் எடுத்துக்காட்டாக அமையட்டும்.

மனிதகுலம் நிலையாக நிற்கின்ற காலம் வரை நம்முடன் வாழ "இம்மானுவேல்" என்ற கடவுள் தெரிந்தெடுத்த அன்பின் அருட்சாதனம் தான் திவ்விய நற்கருணை. திவ்விய நற்கருணை மீது கொண்டுள்ள பக்தி நமது கிறிஸ்தவ ஆன்மீக வாழ்க்கையின் உள்காம்பாகும். திவ்விய நற்கருணையிலிருந்து நம்முடைய நல்வாழ்க்கையை அமைக்க தேவையான வெப்பமும் உந்து சக்தியும் நமக்கு கண்டெடுக்கலாம். திவ்விய நற்கருணை அருகே அமர்ந்து நம்முடைய ஆன்மீக வாழ்வின் பாதையில் ஓங்கி வளர்வதற்கு சாவறா தந்தையின் திவ்விய நற்கருணை மீதுள்ள பக்தியின் வெளிபாடுகள் நமக்கு உதவுகின்றன. நாமும் அவர் வழி நின்று பயனடைவோம்.

**புனித எவுப்பிராசியம்மாவின் நற்கருணை பக்தி**

"உலகின் ஒளி நானே" (யோவா.8:12) என்றுரைத்த நற்கருணை நாதரின் ஒளியை ஏற்று 1877 முதல் 1952 வரை தனது புனித வாழ்வினால் உலகை ஒளிரச் செய்த எவுப்பிராசியம்மாவின் நற்கருணை பக்தியைக் குறித்து சற்று சிந்திப்போம்.

இளம் றோசாவில் வேறு யாரிடமும் இல்லாத அளவுக்கு நற்கருணை பக்தி காணப்பட்டது. முதன்முதலாக நற்கருணை நாதரை ஏற்றுக் கொள்ளும்போதே "நான் ஒரு புனிதை ஆவேன்" என்ற உறுதிப்பாட்டினை இதயத்தில் பொறித்து வைத்தார். "அதற்காக நான் ஒரு அருட்கன்னியராவேன்" என்று முடிவெடுத்தார். அவ்வாறு தனது 9வது வயதிலேயே றோசா தனது கற்பினை இறைவனுக்கு அர்ப்பணித்தார்.

புனித கன்னிமரியாவும் எவுப்பிராசியம்மாவும் தாயும் மகளும்போல் உறவு கொண்டிருந்தனர். இத்தாயின் வழியாக அவர் எப்போதும் நற்கருணை நாதரிடம் ஒன்றித்திருந்தார். இவ்வாறு தனது வாழ்வை முழுமையாக நற்கருணை நாதரிடம் ஒப்படைத்தார்.

''எப்போதும் செபிக்கும் அன்னை'' என அவர் அறியப்பட்டார். அருட்கன்னியர்கள் இல்ல ஆலயத்தின் ஒரு மூலையில் ஒரு சிறிய பெஞ்சில் அமர்ந்து நற்கருணை நாதரை நோக்கி செபம் செய்யும் எவுப்பிராசியம்மாவை குழந்தைகளும் முதியோர்களும் உடன் வசித்த அருட்கன்னியர்களும் கண்டார்கள். இவ்விதம் நற்கருணை நாதரின் பிரசன்னத்தில் ஜெபம் செய்து இறைவனோடு இணைந்து உரையாடி காலம் கடந்து போவதையும் அறியாத எவுப்பிராசியம்மா ''நற்கருணை பேழையின் காவலாளி'' என்று அழைக்கப்பட்டார்.

நற்கருணை நாதரை ஆராதிக்கவும், நன்றி சொல்லவும், மக்களின் நிந்தை அவமானங்களுக்கு பரிகாரம் செய்யவும் அவர் விரும்பினார். ஆதலால் எல்லா மாதங்களிலும் முதல் வெள்ளிக்கிழமை கன்னியர் இல்ல ஆலயத்தில் நற்கருணை ஆராதனை நடத்துவதற்கு ஆயரிடம் அனுமதி வாங்கினார். ''திவ்விய நற்கருணையின் திருத்தூதர்'' என்றும் அழைக்கப்பட்டார். அன்றாடம் திருப்பலியில் பங்கெடுத்து நற்கருணை உட்கொண்டு நன்றி கெட்ட மனிதர்களின் பாவத்திற்கு பரிகாரமாக ஒப்புக்கொடுத்தார். தவறான தப்பறைகளிலிருந்தும், ஷீஸ்மகளிலிருந்தும் திருச்சபையை மீட்பதற்காக நற்கருணைப் பேழையின் முன் நிரந்தரமாக செபித்தார்.

கன்னியர் இல்ல சகோதரிகள் இவரை ''நடமாடும் நற்கருணைப் பேழை'' என்றழைத்தனர் என முக்திப்பேறு பட்டமளித்த திருத்தந்தை பெனடிக்ட் கூறியுள்ளார்.

எவுப்பிராசியம்மா ''நற்கருணை நாதரின் ஆன்மா'' என புனிதர் பட்டமளிக்கும் சங்கத்தின் தலைவர் கர்தினால் சரைவா மார்ட்டின்ஸ் கூறுகின்றார். ஆம் இவர் நற்கருணை நாதரின் எவுப்பிராசியம்மாவாக இருந்தார்.

திருப்பலியில் பங்கெடுக்கவும், நற்கருணை நாதரை உட்கொள்ளவும் நிரந்தர தாகம் கொண்டார் என்பதை அவரது கடிதங்கள் வெளிப்படுத்துகின்றன. நற்கருணை கிறிஸ்தவ வாழ்வின் உறைவிடமும் உன்னத நிலையுமாகும் என்று 2ம் வத்திக்கான் சங்க ஏடு எடுத்துரைத்தது இவர் வாழ்வில் முழுமையாக பிரதிபலித்தது.



13 மணி, 40 மணி ஆராதனையை ஆரம்பித்த CMI சபையை உருவாக்கிய சாவறாத் தந்தையின் உள்ளத் தூண்டுதலின் சுடர் விடும் ஒளியை இவர் ஆராதனை வேளைகளில் கண்டார்.

நற்கருணைப் பேழையில் நற்கருணையில் வீற்றிருக்கும் இயேசு, மனிதர்களின் பாவங்களின் நிமித்தம் வேதனைப்படுவதை அறிந்த இவர் ஆறுதல் கொடுக்க எப்போதும் பேழை முன் செபித்துக் கொண்டிருந்தார்.

கைப்பேசி மற்றும் இணையதளம் வாயிலாக நிரந்தரமாக உலகத்தோடும், உலகப் பொருட்களோடும் உலக இன்பங்களைத் தேடும் இன்றைய மனிதர்களுக்கு நடமாடும் நற்கருணைப் பேழையாக நற்கருணை நாதரோடு இறைமகிழ்வில் ஒன்றித்து மகிழ்ந்து பிறரையும் இறைவனில் மகிழ்வித்த எவுப்பிராசியம்மா ஆன்மீக உலகிற்கு வழிகாட்டும் அணையா விளக்காவார்.

நற்கருணை நாதரை நமது வாழ்வின் மையமாக ஏற்றுக் கொள்வோம். வாழ்வில் வரும் இன்னல் இடையூறுகளின்போது நற்கருணை நாதர் தரும் ஆறுதலை உணர்ந்து கொள்வோம். திருப்பலியில் பக்தியுடனும், தூய உள்ளத்துடனும் பங்கெடுத்து இதயத்தின் ரகசியங்களை அவரோடு பகிர்ந்துக் கொள்வோம். இதற்காக எவுப்பிராசியம்மா அனைவருக்கும் முன்மாதிரியும் தூண்டுதலும் ஆகட்டும்!

அனைவரையும் இப்புனிதர்கள் வழியாக இறைவன் நிறைவாய் ஆசீர்வதிப்பாராக.

**மார் ஜார்ஜ் ராஜேந்திரன்**
தக்கலை மறைமாவட்ட ஆயர்

---

**Pope Francis**
# TWEETS



**Pope Francis** @Pontifex Nov 1
A good example brings about so much good, but hypocrisy brings about much evil.

# அருட்பணிப்பேரவை

அன்புடையீர்!

தக்கலை மறைமாவட்ட 4ஆம் அருட்பணிப் பேரவையின் 4ஆம் அமர்வு தக்கலை சங்கமத்தில் 02.10.2014 அன்று ஆயர் தலைமையில் நடைபெற்றது. அருட்திரு. ஜோமோன் அடிகள் தலைமையில் நடைபெற்ற இறைவேண்டலுக்குப்பின் பேரவைச் செயலர் அருட்திரு. மிஜோ புத்தன்புரைக்கல் அடிகளார் அனைவரையும் வரவேற்றார். பேரவை இணைச்செயலர் திரு.ஜாண் அறிக்கை சமர்ப்பிக்க அறிக்கை ஏற்றுகொள்ளப்பட்டது.



வழிபாட்டுக்குழு, மறைக்கல்விக்குழு, இளைஞர் திருத்தொண்டுக்குழு, கல்விக்குழு, சமூகச் சேவைக்குழு ஆகிய பேரவைக்குழுக்கள் தத்தம் அறிக்கைகளை சமர்ப்பித்தன. தொடர்ந்து அறிக்கைகள் மீது விவாதம் நடைபெற்றன. சமூகத்தொடர்புக் குழு அறிக்கை சமர்ப்பிக்கவில்லை.

தேநீர் இடைவேளைக்குப் பின் மேதகு ஆயர் அவர்கள் குடும்ப ஆண்டு, திருத்தொண்டு மற்றும் துறவற ஆண்டு பற்றி உரையாற்றினார்கள். தொடர்ந்து திருத்தொண்டுக்குழு, தன் அறிக்கை, நடைபெற்றப் பணிகள், நடைபெறவுள்ள பணிகள் பற்றிய விரிவான அறிக்கையை முன்வைக்க அதன் மீது விவாதம் நடைபெற்றது. அதைத் தொடர்ந்து குடும்ப ஆண்டுப்பணிக்குழு தன் அறிக்கை, நடைபெற்றப் பணிகள், நடைபெறவுள்ள பணிகள் பற்றிய விரிவான அறிக்கையை முன்வைக்க அதன் மீது விவாதம் நடைபெற்றது.

உணவு இடைவேளைக்குப் பின்னர் அருட்திரு. பெலிக்ஸ் அடிகளார் துறவற ஆண்டு செயல்திட்டங்களைக் கூற



உறுப்பினர்கள் ஆலோசனை கூறினர். லூக்கா கொல்லம்பறம்பில் அடிகளார் நவம்பர் 23 அன்று புனிதராக அறிவிக்கப் படுகின்ற முத்.சாவறா குரியாகோஸ் அடிகள் மற்றும் முத். எவுப்பிராசியா பற்றி கூறினார்கள்.

கேள்வி நேரத்திற்குப்பின் திருமதி சினேகலதா நன்றி கூற ஆயரின் இறுதியாசீரோடு கூட்டம் இனிதே முடிவுற்றது.

**தீர்மானங்கள்:**

1. ஆறாண்டு செயல்திட்டம் தொடரும்.

2. வழிபாட்டுக்குழு ஒருங்கிணைந்த வழிபாட்டு செயல் திட்டத்தை உருவாக்கி செயல்படுத்த வேண்டும்.

3.அனைத்து பங்குகளும் ஏழுபேர் கொண்ட வழிபாட்டுக்குழு அமைத்து மக்களின் ஆன்மீக வளர்ச்சிக்கு பாடுபட வேண்டும்.

4. மறைக்கல்வி பாடப்புத்தகங்களை தமிழில் மொழி பெயர்ப்பதை மறைக்கல்விக் குழு விரைவுபடுத்த வேண்டும்.

5. குடும்ப ஆண்டு பணிக்குழுவினரின் செயல்பாடுகளுக்கு அனைத்து பங்குகளும், அனைத்து மறைமாவட்ட பக்த இயக்கத் துறைகளும் முழு ஒத்துழைப்பு கொடுக்க வேண்டும்.

6. அனைத்து பங்குத்தந்தையர்களும் தத்தம் பங்குகளில் தந்தையர் நல்வாழ்வு இயக்கத்தைத் தொடங்க வேண்டும்.

7. அனைத்து பங்கு தந்தையர்களும் தத்தம் பங்குகளில் ஐந்து பேர் கொண்ட திருத்தொண்டுக் குழுவைத் தொடங்கி அவர்களின் பெயர்ப்பட்டியலை அக்டோபர் 2014ற்குள் திருத்தொண்டுக்குழு தலைவர் அருட்திரு. தோமஸ் தக்கலை அவர்களிடம் ஒப்படைக்க வேண்டும்.

8. அனைத்து பங்கு தந்தையர்களும் தத்தம் பங்குகளில் சபைக்காக உழைத்த இருவரின் சேவைப்பணியாளர் புள்ளி விவரப் பட்டியலை 25.10.2014ற்குள் பேரவைச் செயலரிடம் ஒப்படைக்க வேண்டும்.

9. மறைமாவட்டத்தின் வளர்ச்சிக்கு அனைவரும் ஒருங்கிணைந்து பாடுபட வேண்டும்.

10.மறைமாவட்ட தினமான நவம்பர் 8ஐ சிறப்பாக கொண்டாட வேண்டும்.

## துறவற ஆண்டு

1. தொடக்கம்:

நம் மறைமாவட்டத்தில் 01.02.2015 ஆம் தேதி துறவற ஆண்டு தொடங்குகிறது.

2. நோக்கம்:

* மக்கள் துறவறத்தைப் பேணுதல்.
* மக்கள் துறவறத்தை அன்பு செய்தல்.
* துறவறத்தையும் துறவிகளையும் மதித்தல்.

3. செயல் திட்டம்:

*துறவற ஆண்டின் தொடக்கமும் முடிவும் மறைமாவட்ட அளவில் நடைபெறும்.

*பங்கு ஆண்டு விழாவில் ஒரு நாளை துறவிகளுக்கான நாளாக ஒதுக்குவது.

*உறவியக் கூட்டங்களில் துறவிகள் பங்கேற்று தம் அனுபவங்களை பகிர்வர்.

*திருச்சபையை அழகுபடுத்தும் துறவிகளை நம் குடும்ப உறுப்பினர் போன்று அங்கீகரித்து மதித்தல்.

*நம் மறைமாவட்டத்தில் உள்ள 17 துறவற சபை சார்ந்த குருக்களையும் கன்னியர்களையும் கௌரவப்படுத்துதல்.

*பணிக்குழு ஒன்றை நிறுவி துறவற ஆண்டுப் பணிகளை சிறப்புடன் செயல்படுத்துதல்.

*துறவற ஆண்டை முன்னிட்டு ஆண்டு மலர் வெளியிடுதல்.

*விரைவில் புனிதராக இருக்கும் அருட்தந்தை சாவறா குரியாகோஸ் அடிகள், அருட்சகோதரி எவுப்பிரேசியாவின் திருநிலைப்பாடுகளை சிறப்பாகக் கொண்டாடுதல்.

அருட்பணி. **மிஜோ புத்தன்புரைக்கல்**
செயலர்



## குழந்தை ஈசோ இயக்கம்

"பாலகரின் மழலையிலும் குழந்தைகளின் மொழியிலும் வலிமையை உறுதிப்படுத்தி உம் பகைவரை ஒடுக்கினீர்" (திருப் 8:12)

புதிய பொறுப்பாளர்கள் நியமனம்

குழந்தை ஈசோ இயக்கத்தின் செயலராக, கடந்த சில வருடங்களாகச் சிறப்புடன் பணியாற்றி வந்த அருட்சகோதரி ஆன்மரியா CMC விற்கு பதிலாக அருட்சகோதரி றோசிட் FCC புதிய பொறுப்பாளராக தேர்வு செய்யப்பட்டு நியமிக்கப்பட்டார். அருட்சகோதரி ஆன்மரியா CMC அவர்களின் தன்னலமற்ற தொண்டிற்கு நன்றியும் அருட்சகோதரி றோசிட் FCC அவர்களின் பணி எங்கும் ஒளிவிளக்காய் மிளிர்ந்திட இதயங்கனிந்த வாழ்த்துக்களையும் தெரிவித்துக்கொள்கிறோம்.

நித்திரவிளை மறைவட்டத்தின் ஆனிமேட்டராக ஊக்கமுடன் செயலாற்றிய அருட்சகோதரி எல்ஷீனா ASMI அவர்களுக்குப் பதிலாக அருட்சகோ.ஜிஷி மரியா ASMI அவர்களும், படந்தாலுமூடு மறைவட்டத்தின் ஆனிமேட்டராகப் பணியாற்றிய செல்வி. பிந்தியா அவர்களுக்குப் பதிலாக அருட்சகோ.ஷெறின் ASMI அவர்களும் தேர்வு செய்யப்பட்டு நியமிக்கப்பட்டார்கள். பழைய பொறுப்பாளர்களுக்கு நன்றியும், புதிய பொறுப்பாளர்களின் பணி சிறக்க வாழ்த்துக்களும், பாராட்டுக்களும் தெரிவித்துக் கொள்கிறோம்.

மறைவட்ட தளங்களில் ஆர்வமுடன் பணியாற்றி வருகின்ற ஆனிமேட்டர்ஸ் பின்வருமாறு :

| | | |
|---|---|---|
| தக்கலைபிலாங்காலை | - | அருட்சகோ.றோசிட் FCC |
| சூசைபுரம் | - | அருட்சகோ.ஆனி SABS |
| மஞ்சாலுமூடு | - | அருட்சகோ.தீபா SH |
| நித்திரவிளை | - | அருட்சகோ.ஜிஷி மரியா ASMI |
| படந்தாலுமூடு | - | அருட்சகோ.ஷெறின் ASMI |
| ஆறுகாணி | - | திருமதி.பீனா சேவியர் |

## Christeen 2015

குழந்தைகளுக்கானச் சிறப்புத் தியானம் "Christeen 2015" 06.12.2014, 07.12.2014 ஆகிய தினங்களில் படந்தாலுமூடு திருஇருதய மறைவட்ட ஆலயத்தில் நடைபெற உள்ளது. இத்தியானத்தில் சிறப்புத் திருப்பலி, பாவசங்கீர்த்தனம், ஆராதனை, செய்கைப்பாடல்கள், கவுன்சிலிங், வகுப்புகள் ஆகியவை இடம்பெறும். இதில் 9 ம் வகுப்பு வரை படிக்கின்ற அனைத்துக் குழந்தைகளும் கலந்து கொள்ள வேண்டும் என்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

குழந்தை ஈசோ இயக்கப் போட்டிகள்

"கலையின் வழியாக விவிலியம் கற்றுக் கொள்ளுதல்" என்ற நோக்குடன், இந்த வருடமும் சிறுமலர்களுக்கான போட்டிகள் பிப்ரவரி மாதத்தில் மறைவட்ட அளவில் நடத்தப்படும்.

ஆறுகாணி மறைவட்டத்திற்கான போட்டிகள் 07.02.2015 அன்று ஆறுகாணியிலும், மற்ற ஐந்து மறைவட்டத்திற்கானப் போட்டிகள் 14.02.2015 அன்று படந்தாலுமூட்டிலும் நடைபெறும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

நடைபெறும் போட்டிகள்

**Infants** - **Bible Sentence Recitation, Action Songs**
**Child** - **Speech, Group Dance**

அருட்தந்தை ஜிம்மி தெக்கேகடுமத்தில்,
இயக்குநர்.

---

**Pope Francis**
**TWEETS**


**Pope Francis** @Pontifex Oct 30
The principal mission of the Church is evangelization, bringing the Good News to everyone.


**Pope Francis** @Pontifex Oct 28
May we help people to discover the joy of the Christian message: a message of love and mercy.



## சிறுமலர் மிஷன்லீக் இயக்கம்

மிஷன்லீக் இயக்க ஊக்குவிப்பாளர் மற்றும் பொறுப்பாளர்களின் கூடுகை 01.11.2014 அன்று கல்லுவிளை அலுவலகத்தில் நடைபெற்றது. மிஷன் லீக்கின் ஆண்டுத்திட்டம் பற்றிய கலந்தாய்வு நடைபெற்றது. மிஷன் லீக் மாணவர்களுக்கு கொடுக்கப்பட்டுள்ள நவம்பர் மாத நிகழ்ச்சிகள் பின்வருமாறு.

02 - பாவசங்கீர்த்தனம் செய்து நற்கருணை எடுக்க வேண்டும்.

09 - பங்கின் ஓர் குடும்பத்திற்காக செபமாலை சொல்லி செபித்தல்.

16 - ஆலயத்திற்கு வருகை தராத ஒருவரை கூட்டிவந்து விசுவாசம் குறைந்த மக்களுக்காக 3 விசுவாசப்பிரமாணம் சொல்லுதல்.

23 - குடும்பங்களை விசுவாசத்தில் எவ்வாறு ஒருங்கிணைத்தல் பற்றி வகுப்பு நடத்துதல்

30 - திருக்குடும்ப ஆண்டை முன்னிட்டு கிறிஸ்மஸ் நண்பரை தேர்ந்தெடுத்து அன்று முதல் அந்நண்பருக்காகவும், அவர் குடும்பத்திற்காகவும் செபித்தல்.

அருட்தந்தை ஜினோய் தோமஸ்,
இயக்குநர்.

---

**Pope Francis**
**TWEETS**


**Pope Francis** @Pontifex Oct 25
Jesus' Cross shows the full force of evil, but also the full power of God's mercy.


**Pope Francis** @Pontifex Oct 23
The family is where we are formed as people. Every family is a brick in the building of society


**Pope Francis** @Pontifex Oct 21
If faith is to be strong and healthy, it must be constantly nourished by the Word of God.

## தக்கலை கத்தோலிக்க இளைஞர் இயக்கம்

இளைஞர் இயக்கத்தின் 2015ம் ஆண்டிற்கான செயல்திட்டங்கள் பற்றிய கூடுகை அக்டோபர் மாதம் 19 அன்று மதியம் 2.00 மணியளவில் படந்தாலுமூடு திரு இருதய அரங்கில் வைத்து தூய ஆவிப்பாடல் பாட, படந்தாலுமூடு இளைஞர் இயக்க தலைவர் அபிஷ் அவர்களின் இறைவேண்டலுடன் ஆரம்பமானது. இயக்குநர் தந்தை அருட்பணி பெலிக்ஸ் அவர்கள் அனைவரையும் வரவேற்று குறும்படம் மூலம் வகுப்புகள் நடத்தினார்கள். முதலில் இளைஞர்கள் சந்திக்கும் சவால்கள் மற்றும் அதற்காக தீர்வு பற்றி குழுவிவாதம் நடைபெற்றது. தொடர்ந்து அதனடிப்படையில் மூன்று சிந்தனைகள் தேர்ந்தெடுக்கப்பட்டு 2015ம் ஆண்டில் செயல்படுத்த தீர்மானிக்கப்பட்டது. அவையாவன.

1. வேலைவாய்ப்பு
2. போதை ஒழிப்பு
3. விசுவாசப் பயிற்சி

மேலும் 2015ம் ஆண்டில் செயல்படுத்த வேண்டிய பல்வேறு திட்டங்களும் அவற்றிற்கான நாட்களும் தயாரிக்கப்பட்டது. அமர்வு பற்றிய கருத்துக்கள் பகிரப்பட்டது. ஒருசில பொறுப்பாளர்கள் மேற்படிப்புக்குச் சென்ற காரணத்தால் காலியான பொறுப்புகளுக்கு புதிய பொறுப்பாளர்கள் தேர்வு நடைபெற்றது. தலைவராக அபீஷ் படந்தாலுமூடு அவர்களும், துணைத்தலைவராக ஜோணிக் முஞ்சிறை அவர்களும், செயலராக அபிஷா படந்தாலுமூடு அவர்களும், பொருளராக தங்கசெலின் முழுக்கோடு அவர்களும் ஒருமனதாக தேர்ந்தெடுக்கப்பட்டனர். புதிய பொறுப்பாளர்களின் பணிசிறக்க வாழ்த்துக்களும், பாராட்டுக்களும் தெரிவித்துக் கொள்கிறோம்.

இக்கூடுகையில் துணை இயக்குநர் அருட்தந்தை ஷாஜன் நெட்டபொங்கு, நித்திரவிளை மறைவட்ட இயக்குநர் அருட்தந்தை மிஜோ புத்தன்புரையில், பள்ளிக்கோணம் பங்குத்தந்தை பைஜு மற்றும் கல்லுவிளை சமூக சேவை இயக்க துணைஇயக்குநர் அருட்தந்தை செபி மற்றும் அனைத்து மறைவட்டங்களின் இளைஞர் பிரதிநிதிகளும் கலந்துகொண்டு சிறப்பித்தனர். மாலை 5.00 மணியளவில் கூட்டம் நிறைவுபெற்றது.



## தலைமைத்துவ பயிற்சி முகாம் 2015

இளைஞர் இயக்க பொறுப்பாளர்களுக்கான தலைமைத்துவ பயிற்சி முகாம் நவம்பர் 21 மாலை 5.00 மணி முதல் ஆரம்பமாகி 23 மாலை 4.00 மணி வரை 3 நாட்கள் நடைபெறுகிறது. அனைத்து இளைஞர் இயக்க தலைவர்களும், செயலாளர்களும் தவறாமல் கலந்துகொண்டு பயன்பெற அழைக்கிறோம்.

அருட்தந்தை பெலிக்ஸ்
இயக்குநர்

---

## புதிய மறைமாவட்ட செயலர்

அருட்தந்தை ஆன்றனி கண்ணநாயக்கல் ஜோசப் அவர்கள் மறைமாவட்ட செயலராக பொறுப்பேற்றுள்ளார்கள். தந்தை அவர்கள் சலேசியன் துறவற சபையின் சில்கார் மகாணத்தை சார்ந்தவர். 27.07.1970 அன்று பிறந்த இவர் 24.05.1989ல் துறவற வார்த்தைப்பாட்டை ஏற்று, தொடர்ந்து ஏற்காடு சலேசியன் போண்டிபிக்கல் குருத்துவக் கல்லூரியில் தத்துவயியலை 1991 லும், ஷில்லாங் திருஇருதய இறையியல் கல்லூரியில் இறையியலை 1999லும் நிறைவு செய்து பின் குருவாக 24.05.1989 அன்று அருட்பொழிவு செய்யப்பட்டார்.




பின்னர் சலேசியன் நோவிசியேட் ஆசிரியராகவும், பூந்தமல்லி திருஇருதய குருமட ஆசிரியராகவும், தத்துவயியல், இறையியல் விரிவுரையாளராகவும், சென்னை ஆங்கிலோ இந்தியன் மேனிலைப்பள்ளி உளவியல் ஆலோசகராகவும், ஷில்லாங் திருஇருதய இறையியல் கல்லூரி விரிவுரையாளராகவும் பணியாற்றினார். தற்போது கௌகாத்தி அசாம் தொன் போஸ்கோ பல்கலைக் கழகத்தில் முனைவர் பட்டம் பயின்று வரும் இவர் தக்கலை மறைமாவட்ட செயலராகவும் நியமிக்கப்பட்டுள்ளார். தந்தை அவர்களின் பணிசிறக்க வாழ்த்துக்கள்.

# நற்செய்தி நிலையம்

"என் அன்பார்ந்த சகோதர சகோதரிகளே; உறுதியோடு இருங்கள்; நிலையாய் நில்லுங்கள். ஆண்டவருக்காக நீங்கள் உழைப்பது வீண் போகாது என்பதை அறிந்து ஆண்டவரின் பணியை இன்னும் அதிகமாக செய்யுங்கள்" (1 கொரி 15 : 58)

**மறைவட்ட கலைவிழா போட்டிகள்:**

2014 -2015 ஆம் ஆண்டு விவிலியக் கலைவிழா இலக்கியப் போட்டிகள் மறைவட்ட அளவில் அக்டோபர் மாதம் 12 ஆம் தேதி ஞாயிற்றுக்கிழமை அன்று பிற்பகல் 2.30 மணிக்கு அந்தந்த மறைவட்டங்களில் நடத்தப்பட்டது. Sub Junior மாணவர்களுக்கு Colouring – ம், Junior, Seniors மாணவர்களுக்கு Essay writing –ம் Poetry writing போட்டியும் நடைபெற்றது. பங்களவில் முதல் இடங்களைப் பெற்ற மாணவர்கள் இப்போட்டிகளில் பங்குப்பெற்றனர். இப்போட்டிகள் அனைத்தும் மறைக்கல்வியின் மறைவட்ட ஒருங்கிணைப்பாளர்களின் தலைமையில் நடைபெற்றது. இப்போட்டிகளில் 450 –க்கு மேல் மாணவர்கள் பங்கு பெற்றனர். அனைவருக்கும் பாராட்டுகள்.

**தலைமை ஆசிரியர்களின் கூடுகை :**

மறைக்கல்வி தலைமை ஆசிரியர்களின் கூடுகை அக்டோபர் மாதம் 25 –ம் தேதி சனிக்கிழமை அன்று பிற்பகல் 2.30 மணிக்கு கல்லுவிளை மறைக்கல்வி அலுவலகத்தில் வைத்து இயக்குநர் அருட்தந்தை ஜெஸ்டின் செறுவேலில் அவர்களின் தலைமையில் நடைபெற்றது. கூடுகையின் போது விவிலியக் கலைவிழா போட்டிகளைப் பற்றி கலந்து ஆலோசிக்கப்பட்டது. மேலும் விவிலிய கலைவிழா படிவங்கள், நோட்டீஸ் மற்றும் ஒன்றாம் பருவத் தேர்வுக்கான வினாத்தாளும் வழங்கப்பட்டது.

**தேர்வுகள் :**

2014 – 2015 –ஆம் ஆண்டு வகுப்பு ½ முதல் 12 வரையுள்ள மறைக்கல்வி மாணவர்களுக்கான ஒன்றாம் பருவத் தேர்வு அக்டோபர் மாதம் 26 ஆம் தேதி ஞாயிற்றுக்கிழமை அன்று அனைத்து மறைக்கல்வி நிலையங்களிலும் நடைபெற்றது.



**மறைமாவட்ட கலைவிழா போட்டிகள்**

2014 - 2015 ஆம் ஆண்டு விவிலிய கலைவிழா இலக்கியப் போட்டிகள் மறைமாவட்ட அளவில் நவம்பர் மாதம் 4 – ஆம் தேதி செவ்வாய் கிழமை அன்று காலை 10.00 மணி முதல் 12. 30 மணிவரை படந்தாலுமூட்டில் வைத்து நடத்தப்பட்டது. இப்போட்டிகளில் மறைமாவட்ட அளவில் முதல் இரண்டு இடங்களைப் பெற்ற மாணவர்கள் பங்கு பெற்றனர்.

**கிறிஸ்மஸ் கூடுகை**

2014 டிசம்பர் மாதம் 13 – ஆம் தேதி சனிக்கிழமை அன்று கல்லுவிளை நற்செய்தி நிலையத்தில் வைத்து காலை 10.30 மணிக்கு மறைமாவட்ட செயலர்களின் கூடுகையும், பிற்பகல் 2.30 மணிக்கு மறைவட்ட அருட்தந்தையர்கள், மறைவட்ட செயலர்கள், ஊக்குவிப்பாளர்கள், மறைக்கல்வி தலைமை ஆசிரியர்களின் கூடுகையும் நடைபெறும்.

அருட்தந்தை **ஜெஸ்டின் செறுவேலில்**
இயக்குநர்

---

## ஆலய அடிக்கல் நாட்டுவிழா

மேழக்கோடு தூய பிரான்சிஸ் அசிசி புதிய ஆலயம் கட்டுவதற்கான அடிக்கல் நாட்டுவிழா அக்டோபர் 5 அன்று காலை 9.30 மணியளவில் நடைபெற்றது. ஆயர் அவர்கள் அடிக்கல் நாட்டினார்கள், முக்கூட்டுக்கல் தூய மரியன்னை இளங்குருமட அதிபர் அருட்தந்தை டோம் குன்னம்புறம் ஆகியோர் கலந்துகொண்டார்.



தொடர்ந்து திருப்பலியும் நடைபெற்றது. அருட்தந்தை அகஸ்டின் தலோடில் அவர்கள் நிகழ்வினை ஏற்பாடு செய்திருந்தார்கள்.

# இல்வாழ்வு இயக்கம்

திருமணப்பயிற்சி வகுப்புகள்

திருமணப்பயிற்சி வகுப்புகள் நவம்பர் மாதம் 14 முதல் 16 வரை மூன்று நாட்கள் தக்கலை சங்கமத்தில் நடைபெறும். திருமணப் பயிற்சி வகுப்புகளில் கலந்துகொள்ளச் செய்ய பங்குத்தந்தையர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

மாதர் ஜோதிஸ்

நவம்பர் 24 அன்று கொண்டாடப்படும் கிறிஸ்து அரசர் திருநாளே நவம்பர் மாத சிந்தனை ஆகும். திருப்பணியாக வீடுகளில் நோயாளிகளாக இருப்பவரை அழைத்து வந்து திருப்பலி மற்றும் ஒப்புரவு அருளடையாளத்தில் பங்கு கொள்ளசெய்து அன்பின் விருந்து அளிக்கவேண்டும். போட்டியாக இயேசுவின் வாழ்க்கை நிகழ்வினை தனிச் செய்கை (மோனோ ஆக்ட்) நடத்துதல் அல்லது விவிலிய வினாடி வினா நடத்துதல் வேண்டும்.

வந்து பாருங்கள் செபக்குழு

வந்துபாருங்கள் செபக்குழுவின் 88-வது ஒருநாள் தியானம் அக்டோபர் 11 அன்று பளுகல் ஆலயத்திலும், 89-வது ஒருநாள் தியானம் 18 அன்று பாலப்பள்ளத்திலும் நடைபெற்றது. திருப்பலி, நற்கருணை ஆராதனை, செபவழிபாடு ஆகியவை நடைபெற்றது. ஏராளமான மக்கள் பங்கேற்று பலனடைந்தனர். நவம்பர் மாத தியானம் நவம்பர் 8 பளுகலிலும் 15 அன்று பாலப்பள்ளத்திலும் நடைபெறும். பங்கேற்கசெய்ய பங்குத்தந்தையர்களும், அருட்சகோதரிகளும் உற்சாகப்படுத்த கேட்டுக்கொள்கிறோம்.

தசாம்சா கிளப்

தசாம்சா கிளப்பின் அக்டோபர் மாத கூடுகை அக்டோபர் 12 அன்று வில்சன் மஞ்சாலுமூடு அவர்கள் இல்லத்தில் நடைபெற்றது. தசமமாக கிடைத்த 12000 ரூபாய் ஏழை மாணவர் ஒருவரின் உயர்கல்விக்காக வழங்கப்பட்டது. நவம்பர் மாத கூடுகை நவம்பர் 9 அன்று பால் தனுவச்சபுரம் அவர்கள் இல்லத்தில் நடைபெறும்.



குடும்ப ஆண்டு 2014

குடும்ப ஆண்டு பணிக்குழுவினரால் நடத்தப்படும் இறைவாக்கினர் தெருநாடகம் அக்டோபர் 30 சூசைபுரத்தில் நடத்தப்பட்டது. நவம்பர் 14 பாலப்பள்ளத்திலும் காண்பிக்கப்படுகிறது.

# I. Family Apostlate

1. Pre-Marriage Course: 2014 നവംബർ മാസം 14, 15, 16 തിയതികളിൽ തക്കല സംഗമത്തിൽ വച്ച് Pre-Marriage Course നടത്തപ്പെടും. തക്കല രൂപതയിലെ യുവതീയുവാക്കളെ നമ്മുടെ Course - ൽ മാത്രം പങ്കെടുപ്പിക്കാനായി ഇടവക വികാരിമാർ പ്രത്യേകം ശ്രദ്ധിക്കുക.

2. Mathru Jothis: നവംബർ മാസ പഠന വിഷയം ക്രിസ്തുരാജത്വ തിരുനാൾ (നവംബർ 24). ദൗത്യമായി വീടുകളിൽ രോഗികളായി കിടക്കുന്നവരെ പള്ളിയിൽ കൊണ്ടുവന്ന് വി. കുമ്പസാരം, വി. കുർബാന, സ്നേഹവിരുന്ന് എന്നിവ നൽകുക. മത്സരം യേശുവിന്റെ ഒരു ജീവിത സംഭവം മോണോ ആക്ട് ആയി നടത്തുക. അല്ലെങ്കിൽ ഒരു ബൈബിൾ ക്വിസ് നടത്തുക.

II. 1. വന്ത് പാരുങ്കൾ പ്രാർത്ഥനാ ഗ്രൂപ്പ് : പ്രാർത്ഥനാ ഗ്രൂപ്പിന്റെ ആഭിമുഖ്യത്തിൽ 88-ാമത് ഏകദിന ധ്യാനം നവംബർ 8-ാം തിയതി ശനിയാഴ്ച പളുകൽ ചർച്ചിൽ വച്ചു നടക്കും. നവംബർ 15 - ാം തിയതി പാലപ്പള്ളം ചർച്ചിൽ വച്ചു നടക്കും. ദൈവജനത്തെ പറഞ്ഞുവിടാൻ അച്ചന്മാരും സിസ്റ്റേഴ്സും ശ്രദ്ധിക്കുമല്ലോ.

2. ദൈവീക ദശാംശ ക്ലബ്ബ് : പ്രാർത്ഥനാ ഗ്രൂപ്പിന്റെ ആഭിമുഖ്യത്തിലുള്ള ദൈവീക ദശാംശ ക്ലബ്ബിന്റെ ഒക്ടോബർ മാസ യോഗം 12 ഞായറാഴ്ച മഞ്ഞാലുമൂട് വിൽസന്റെ ഭവനത്തിൽ നടന്നു. ദശാംശമായി ലഭിച്ച 12,000 രൂപ ഒരു മകന്റെ ഉപരി പഠനത്തിനായി നൽകി. നവംബർ മാസ യോഗം 9 ന് ധനുവച്ചപുരം പോളിന്റെ ഭവനത്തിൽ നടക്കും.

III കുടുംബ ആണ്ട് 2014: കുടുംബ ആണ്ട് പണിക്കുഴുവിന്റെ ആഭിമുഖ്യത്തിലുള്ള "ഇറൈ വാക്കിനർ" തെരുവു നാടകം ഒക്ടോബർ 31 ന് സൂസൈപുരം ഇടവകയിൽ നടക്കും. നവംബർ മാസത്തിൽ പാലപ്പള്ളം ഇടവകയിൽ നടക്കും.

அருட்தந்தை ஜோசப் நெடும்புறம்
இயக்குநர்

# மரியாயின் சேனை

## தக்கலை கொமித்சியம்



மரியாயின் சேனை தக்கலை மறைமாவட்ட கொமித்சியத்தின் சார்பாக 26-10-2014 ஞாயிறு பிற்பகல் 2.45 மணிக்கு மாலைக்கோடு திருச்சிலுவை ஆலயத்தில் தொடங்கி மஞ்சாலுமூடு புனித குழந்தை தெரசாள் மறைவட்ட ஆலயம் வரை ஜெபமாலை திருப்பவனி நடத்தப்பட்டது. தொடக்கத்தில் மாலைக்கோடு பங்கு அருட்தந்தை.ஜோசப் நெடும்புறம் அவர்கள் அனைவரையும் வரவேற்றார்கள். அதை தொடர்ந்து கொமித்சிய ஆன்ம இயக்குநரும் குருகுல முதல்வரும் ஆகிய பேரருட்தந்தை ஜோஸ் முட்டத்துபாடம் தொடக்கஉரை ஆற்றினார்கள். அதைத்தொடர்ந்து திருப்பவனி ஆரம்பமானது. இப்பவனியின் முன்புறமாக ஜெபமாலை தாங்கிய சிலுவையும், இரு எரியும் திரிகளும் அதைத் தொடர்ந்து அலங்கரிக்கப்பட்ட அன்னை சொரூபமும் கொண்டு வரப்பட்டது. திருசெபமாலை பவனியை வழிநடத்துவதற்காக பாடகர் குழுவிற்கு 3 வாகனம் ஏற்பாடு செய்யப்பட்டு இருந்தது. மக்கள் இருவரிசையாக பாடகர் குழுவோடு இணைந்து செபமாலை செபித்து நடந்து வந்தார்கள். பவனியில் நமது பாசமிகு மேதகு ஆயர் அவர்களும் நடந்து வந்தார்கள். 4.30 மணிக்கு மஞ்சாலுமூடு மறைவட்ட ஆலயத்தை வந்தடைந்தது. அதை தொடர்ந்து நிறைவு கூட்டம் நடைபெற்றது. கொமித்சிய தலைவர் சகோ.தோமஸ் பன்னீர் செல்வம் அனைவரையும் வரவேற்றார்கள். மஞ்சாலுமூடு மறைவட்ட பங்கு தந்தை பேரருட்தந்தை பீட்டர் கிழக்கேல் வாழ்த்தி பேசினார்கள். அனைத்து அருட்தந்தையர்கள் சார்பாக சூசைபுரம் மறைவட்டதக்கலை மறைமாவட்ட கொமித்சிய பங்கு தந்தை, பேரருட்தந்தை ஆன்றனி ஜோஸ் செபமாலையின் சிறப்பு பற்றி வாழ்த்தி பேசினார்கள். அதைத் தொடர்ந்து மேதகு ஆயர் மார். ஜார்ஜ் ராஜேந்திரன் அவர்கள் மரியன்னையின் செய்தி வழங்கியதோடு அன்று முதல் எல்லா குடும்பங்களிலும் செபமாலை செபிக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டதோடு அதனால் நமக்கு கிடைக்கும் பலன்கள் பற்றியும் எடுத்துக்கூறி அனைவரையும் ஆசீர்வதித்தார்கள். இறுதியாக கொமித்சிய துணைத்தலைவர் சகோ. பெஞ்சமின் போஸ் அனைவருக்கும் நன்றி கூறினார்கள். கொமித்சிய செயலர் சகோ. ஹேமா ஏசுராஜ் நிகழ்ச்சிகளை தொகுத்து வழங்கினார்கள். ஏராளமான அருட்தந்தையர்கள், அருட்கன்னியர்கள் மற்றும் 1300 சகோதர, சகோதரிகள் கலந்துகொண்டு பவனியை சிறப்பித்தார்கள்.



இத்திரு செபமாலைப் பவனி சிறப்பாக நடைபெற எல்லா ஆக்கமும், ஊக்கமும் வழங்கி தொடக்கம் முதல் இறுதிவரை எங்களோடு இருந்து எங்களுக்கு ஆசி வழங்கிய எங்கள் பாசமிகு மேதகு ஆயர் மார் ஜார்ஜ் ராஜேந்திரன் அவர்களுக்கும் எங்கள் ஆன்ம இயக்குநர் பேரருட்தந்தை ஜோஸ் முட்டத்துபாடம் அவர்களுக்கும், மாலைக்கோடு பங்குதந்தை ஜோசப் நெடும்புறம் மற்றும் கைக்காரர்கள், பங்கு மக்களுக்கும் பவனிக்கு வேண்டிய எல்லா தேவைகளையும் மிக சிறப்பாக செய்து தந்த மஞ்சாலுமூடு மறைவட்ட பங்குதந்தை பீட்டர் கிழக்கேல் கைக்காரர்கள், பங்கு மக்கள் அனைவருக்கும் மற்றும் பாடகர்குழு திருபவனியில் கலந்து கொண்ட அனைத்து அருட்தந்தையர்கள், அருட்கன்னியர்கள், சகோதர, சகோதரிகள் அனைவருக்கும் மனமார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.

சகோ. தோமஸ் பன்னீர் செல்வம்
தலைவர்

# புனித வின்சென்ட் தே பவுல் சபை

## வட்டார, மத்தியசபை முதன்மைப்பணியாளர் கருத்தரங்கு

தமிழக மண்டல ஒருங்கிணைப்புக்குழு சார்பில் தமிழகத்தில் வின்செந்திய பிறரன்புப் பணிசெய்து வரும் வட்டாரசபை மற்றும் மத்தியசபை தலைவர்களுக்கான இருநாள் பயிற்சி முகாம் திண்டுக்கல்லில் நடைபெற்றது. நமது மத்தியசபை தலைவர் சகோ. ஜயாத்துரை அவர்கள் தலைமையில் சகோ.லாரன்ஸ், சகோ.ஜெஸ்டஸ், சகோ.ராஜா, சகோ.ஜேம்ஸ், சகோ.செபாஸ்டின் உட்பட மொத்தம் 9 பேர் கலந்து கொண்டு பயன்பெற்றனர்.

## வட்டாரசபை இளைஞர் பிரதிநிதிகள் கருத்தரங்கு

தமிழக மண்டல ஒருங்கிணைப்புக்குழு அனைத்து மத்திய மற்றும் வட்டார சபை இளைஞர் பிரதிநிதிகளின் இருநாள் ஆன்மீக பயிற்சி முகாம் அக்டோபர் 25, 26 ஆகிய தேதிகளில் சிவகங்கை மறைமாவட்டம் தூய வியானி அருட்பணி இல்லத்தில் நடைபெற்றது.



விவிலியப்பவனியுடன் ஆரம்பமாகி அருட்தந்தை அவர்களின் ஆன்மீக உரையோடு நிகழ்வுகள் தொடங்கியது. மதியம் பரமக்குடி தொழுநோயாளிகள் இல்லம் சந்தித்து அவர்களுடன் உரையாடல் நடைபெற்றது. 26 ஞாயிறு அன்று சிவகங்கை ஆயர் அவர்கள் தலைமையில் திருப்பலியும் தொடர்ந்து பல்வேறு குழுவிவாதங்களும் நடைபெற்றது. மாலையில் நடைபெற்ற நிறைவு விழாவில் ஒருங்கிணைப்புக்குழுத் தலைவர் சகோ. வின்செண்ட் அவர்கள் நிறைவுரையாற்றினார். செயலர் சகோ. சௌந்தரராஜ் அவர்கள் நிகழ்வை தொகுத்து வழங்கினார்கள். நமது மத்தியசபை இளைஞர் பிரதிநிதி சகோ.பெர்லின் தலைமையில் வட்டாரசபை இளைஞர் பிரதிநிதிகள் சகோ.ஷாஜன் பள்ளிக்கோணம், சகோ.எட்பின் பள்ளிக்கோணம், சகோ.சுரேஷ் மஞ்சாலுமூடு, சகோ.நிஷாந்த்



காட்டாத்துறை, சகோ.ஜிஜின் ஆறுகாணி, சகோ. சுரேஷ் பாலப்பள்ளம், சகோ.ஜெபின் அதங்கோடு ஆகியோர்கள் பங்கேற்று சிறப்பித்தார்கள்.

## அன்பகத்தில் நிறுவனர் மற்றும் பாதுகாவலர் திருவிழா

முஞ்சிறை புனித ஜார்ஜியார் திருத்தல வின்செந்தியர்கள் புனித வின்செண்ட் தே பவுல் மற்றும் அருளாளர் பிரடெரிக் ஓசானாம்




திருநாட்களை 2.10.2014 அன்று மாலை ஆன்மீக ஆலோசகர் அவர்கள் தலைமையில் நற்கருணை ஆராதனையும், திருப்பலியும் நிறைவேற்றி கொண்டாடினார்கள். அன்றைய தினம் தத்துக்குடும்பங்கள் சந்தித்து அவர்களுக்கு உதவித்தொகை வழங்கினார்கள்.25.10.2014 அன்று மாலை முஞ்சிறை அன்பக முதியோர்களை சந்தித்து, அவர்களுக்காக ஜெபித்து பல்வேறு கலைநிகழ்ச்சிகள் நடத்தி அவர்களை மகிழ்வுறச் செய்தார்கள். தொடர்ந்து தந்தை அவர்கள் 'ஏழைகளின் அறப்பணியே வின்செந்திய பணி அதை திறம்பட செய்வது நமது கடமை' என்று ஆன்மீக உரையாற்றினார். தொடர்ந்து சிற்றுண்டி வழங்கப்பட்டது. இறுதியில் புனித டோமினிக் கிளைச்சபைத் தலைவி சகோ. ஸ்னேகலதா அவர்கள் நன்றியுரையும் தொடக்கத்தில் இளைஞர் பிரதிநிதி சகோ.பெல்ஜின் அவர்கள் வரவேற்புரையும் கூறினார்கள்.

## பணியில் புதியவர்கள்

### 1. பள்ளிக்கோணம் திரு இருதய ஆண்கள் கிளைச்சபை

களியல் வட்டாரசபைக்குட்பட்ட பள்ளிக்கோணம் திரு இருதய ஆண்கள் கிளைச்சபையின் புதிய பொறுப்பாளர்கள் பணியேற்பு நிகழ்வு 19.10.2014 அன்று ஆன்மீக இயக்குநர் அருட்தந்தை பைஜு அவர்கள் தலைமையில் திருப்பலிக்குப்பின் நடைபெற்றது. சகோ. விஜயகுமார் புதிய முதன்மைப்பணியாளராகவும், சகோ.

அருள் தங்கப்பன் துணைத்தலைவராகவும், சகோ.பிரபின் செயலராகவும், சகோ.ரமேஷ்குமார் பொருளராகவும், சகோ. ஜெகில் ஜோஸ் இளைஞர் பிரதிநிதியாகவும் மெழுகுவர்த்தி ஏந்தி உறுதிமொழி ஏற்றுக்கொண்டார்கள். அருட்தந்தை பைஜு அவர்கள் ஆசி வழங்கினார்கள். இந்நிகழ்வில் மத்தியசபைத் துணைத்தலைவர் சகோ.சௌந்தரராஜ், இளைஞர் பிரதிநிதி சகோ.ஷாஜன், வட்டாரசபைத் தலைவர் சகோ.ஜெஸ்டஸ் ஆகியோர்கள் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.

2. முழுக்கோடு தோமையார் ஆண்கள் கிளைச்சபை

முழுக்கோடு தூய தோமையார் ஆலயத்தில் செயல்படும் ஆண்கள் கிளைச்சபையின் புதிய பொறுப்பாளர்கள் பணியேற்பு உறுதிமொழி 28.09.2014 அன்று ஆன்மீக ஆலோசகர் அருட்தந்தை சாக்கோ பேசில் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. சகோ. சந்திரன், சகோ.மிக்கேல், சகோ.தனிஸ்லாஸ், சகோ.ஷிபுமோன், சகோ.தங்கசுவாமி, சகோ.மனோஜ் ஆகியோர்கள் முறையே தலைவர், துணைத்தலைவர், செயலர், துணைச்செயலர், பொருளர், இளைஞர் பிரதிநிதியாக உறுதிமொழி ஏற்றுக்கொண்டனர். மத்தியசபைத் துணைத்தலைவர் சகோ.சௌந்தரராஜ் மற்றும் வட்டாரசபை தலைவர் சகோ.ஜெஸ்டஸ் ஆகியோர் கலந்துகொண்டனர்.

சகோ.சுரேஷ் குமார்
செய்தித்தொடர்பாளர்

---

**நினைவிற்கு.....**

8 நவ 9.30A.M @ஆசீர் அரங்கம் - *18வது மறைமாவட்ட தினம்*

9 நவ 9.00A.M @படந்தாலுமூடு - *அருட்.அகஸ்டின் குருத்துவ வெள்ளிவிழா திருப்பலி*

**வேலைவாய்ப்புகள் பற்றிய தகவல்கள் மற்றும் உதவிக்கு தொடர்புகொள்ளுங்கள்....**

அருட்பணி. பெலிக்ஸ், இயக்குநர் TCYM

தொடர்பு எண்: 9791836200



# திருப்பணியாளர் பயிற்சி

திருப்பணியாளர் பயிற்சி ஒவ்வொரு மறைவட்டங்களுக்கும் தனித்தனியாக இயக்குநர் அருட்தந்தை பெலிக்ஸ் அவர்கள் தலைமையில் இறைவணக்கத்துடன் ஆரம்பமாகி காலையில் இரு



அமர்வுகளும் மதிய உணவுக்கு பின் மூன்றாம் அமர்வுமாக நடைபெற்றது. அக்டோபர் 4 அன்று மஞ்சாலுமூடு மற்றும் ஆறுகாணி மறைவட்டங்கள் இணைந்து முக்கூட்டுக்கல் திருக்குடும்ப மேனிலைப்பள்ளியிலும், அக்டோபர் 11 அன்று நித்திரவிளை மற்றும் படந்தாலுமூடு மறைவட்டங்கள் இணைந்து படந்தாலுமூடு திருஇருதய அரங்கிலும், அக்டோபர் 25 அன்று தக்கலை-பிலாங்காலை மற்றும் சூசைபுரம் மறைவட்டங்கள் இணைந்து கல்லுவிளை ஆசீர் அரங்கிலும் வைத்து பயிற்சிகள் நடைபெற்றன. இயக்குநர் அருட்தந்தை பெலிக்ஸ், அருட்தந்தை ஜெஸ்டின் மற்றும் அருட்சகோ. வினு, அருட்சகோ. அபிலாஷ் மற்றும் இளங்குருமட அருட்சகோதரர்கள் ஆகியோர் பயிற்சிகளை வழிநடத்தினர். பங்கேற்ற அனைவருக்கும் ஆயர் வழங்கிய செபமாலைகளை இயக்குநர் வழங்கினார்கள். பயிற்சி பயனுள்ளதாக அமைந்ததாக பங்கேற்றோர் கூறினார்கள்.

| மறைவட்டம் | நாள் | எண்ணிக்கை |
|---|---|---|
| மஞ்சாலுமூடு & ஆறுகாணி | அக்டோபர் 4 | 99 |
| நித்திரவிளை & படந்தாலுமூடு | அக்டோபர் 11 | 65 |
| பிலாங்காலை & சூசைபுரம் | அக்டோபர் 11 | 67 |

அருட்தந்தை பெலிக்ஸ்
இயக்குநர்

## சீரோமலபார் சபைநாள் காணிக்கை-ஜூலை 2014

| Sl.No | Place | Church Name | Amount |
|---|---|---|---|
| | | | |
| 1 | Anamughom | Loretto Matha | |
| 2 | Anayadi | St. George | |
| 3 | Annikkarai | St. Mathew's | 1200 |
| 4 | Arukani | Holy Family | 1,500.00 |
| 5 | Athencode | St. Maria Goretti | 600.00 |
| 6 | Bengri | St. Benadict's | |
| 7 | Cheenivilai | Amala Maria | |
| 8 | Chenamcode | Lourdu Matha Mission | |
| 9 | Chiristurajapuram | Christ the King | 1,600.00 |
| 10 | Kaisalavilai | St. Xavier's | |
| 11 | Kaliyal | St. Mary's | 2000 |
| 12 | Karode | St. Joseph's | 700 |
| 13 | Kattathurai | St. Michael's | 1,500.00 |
| 14 | Kalluvilai | Bld. Mother Theresa | |
| 15 | Kazhuvanthittai | St. Martin de Porres | |
| 16 | Killiyoor | Deva Matha | 1000 |
| 17 | Kulasekaram | St. Joseph's | |
| 18 | Malaicode | Holy Cross | 3000 |
| 19 | Manjalumoodu | Little Flower | 3500 |
| 20 | Mankarai | St. James | 2010 |
| 21 | Marappady | St. Thomas | 1600 |
| 22 | Marthandam | St. Vincent de Paul | |
| 23 | Mathapuram | St. Thomas | 200 |
| 24 | Mezhacode | St. Francies Assisi | |
| 25 | Muzhucode | St. Thomas | |
| 26 | Mukkoottukal | Holy Family | 4000 |
| 27 | Munchirai | St. George | 1000 |
| 28 | Nagercoil | St. Alponsa | 5000 |
| 29 | Netta | St. Thomas | 1000 |
| 30 | Nithravilai | Jeyamatha | 1000 |
| 31 | Padanthalumoodu | Sacred Heart | 2300 |
| 32 | Palappallam | Christ the King | 1200 |
| 33 | Pallikonam | Sacred Heart | |
| 34 | Palugal | St. Thomas | 3250 |
| 35 | Paraicode | Christ the King | 1500 |
| 36 | Pathukani | St. Thomas | |
| 37 | Penu | St. Mary's | 250 |
| 38 | Perunchilampu | St. Thomas Mission | |
| 39 | Pilankalai | Little Flower | |
| 40 | Pilankarai | Loretto Matha | 3545 |
| 41 | Puliyarai | Little flower | |
| 42 | Soosaipuram | St. Joseph's | 1000 |
| 43 | Thackalivilai | Holy Family | 500 |
| 44 | Thettiyode | St. Paul's | |
| 45 | Thettivilai | St. Michael's | |
| 46 | Thuckalay | St. Mary's | 225 |
| 47 | Varuthattu | St. Xavier's | 1393 |
| 48 | Vayalinkarai | St. Antony's | |
| 49 | Vanchinagar | Loretto Matha | |
| 50 | Valan Nagar | St. Joseph's | |
| | | | |
| | | Total | 47573 |



அருட்தந்தை மாத்யூ முளங்ஙாசேரி
பொருளாளர்

## வலைதளம்

நம் மறைமாவட்ட வலைதளம் புனரமைக்கப்பட்டு அக்டோபர் மாதம் முதல் சரியாக செயல்பட்டு வருகிறது. மறைமாவட்ட நிகழ்வுகள் மற்றும் செயல்பாடுளை வலைதளத்திலும் பார்த்து தெரிந்து கொள்ளலாம்.

வலைதள முகவரி: **www.thuckalaydiocese.org**



# இல்லங்களில் திருத்தொண்டு (ஹோம் மிஷன்)

## 1. ஆறுகாணி மறைவட்டம்

இயேசு கிறிஸ்துவின் திருக்குடும்ப வாழ்வை ஒவ்வொரு குடும்ப உறுப்பினர்களும் தங்கள் விருதுவாக்காக ஏற்று ஆன்மீக பாதையில் வளர்ச்சியடைய செய்வதே ஹோம் மிஷன் பணியின் நோக்கமாகும். இப்பணிக்காக ஆயர் அவர்கள் இரிஞ்ஞாலக்குட மறைமாவட்ட திருக்குடும்ப அருட்சகோதரிகளை ஆறுகாணி மறைவட்டத்தில் பணியாற்ற அழைத்தார். ஒவ்வொரு குழுவாக மொத்தம் 8 அருட்சகோதரிகள் அக்டோபர் 15 முதல் 30 வரை அனைத்து வீடுகளையும் சந்தித்து செபித்து உரையாடினர். அருட்சகோதரிகளின் செபம், கடின உழைப்பு, அனுபவம், தன்னார்வப்பணியின் காரணமாக ஹோம் மிஷன் வெற்றிகரமாக நிறைவடைந்தது. இதற்கு உதவிய திருக்குடும்ப அருட்சகோதரிகளுக்கும் மறைவட்ட மக்களின் ஆன்மீக தேவையறிந்து பரிந்துரை செய்த ஆயர் அவர்களுக்கும், வெற்றிபெற உழைத்த ஆறுகாணி மறைவட்ட பங்குத்தந்தையர்கள், அருட்சகோதரிகள் அனைவருக்கும் பாராட்டுக்கள்.

ஒருங்கிணைப்பாளர்
ஆறுகாணி மறைவட்டம்

## 2. மஞ்சாலுமூடு தூய குழந்தை தெரசாள் மறைவட்ட ஆலயம்

கத்தோலிக்க விசுவாச வளர்ச்சி பங்கு மக்களில் நிறைவாக கிடைக்க வேண்டும் என்ற ஆயரின் எண்ணத்திற்கேற்ப 10.08.2014 ஞாயிற்றுக்கிழமை குருகுல முதல்வர் பேரருட்தந்தை ஜோஸ் முட்டத்துப்பாடம் அடிகளார் ஹோம் மிஷனை துவக்கி வைப்பதற்கான அறிவிப்பை திருப்பலியின் வேளையில் அறிக்கையிட்டார்.

அருட்சகோதரி லைசா அவர்களின் தலைமையில் ஆறு அருட்சகோதரிகள் 13.08.2014 முதல் 13.09.2014 வரை 12 உறவியங்களில் மொத்தம் 300 க்கும் அதிகமான வீடுகளை சந்தித்து மக்களோடு உறவாடி அவர்களின் வாழ்க்கைச் சூழலை புரிந்துகொண்டு செபித்தனர். இப்பணிக்கு ஆயத்தமாக SDS அருட்சகோதரிகளும் பங்கு மக்களும் நாள் முழுவதும் பரிந்துரை



செபங்கள் செய்தனர். ஹோம் மிஷன் நடைபெறும் வீடுகளை பங்குத் தந்தை முதலில் சென்று மந்திரித்து பின்னர் அருட்சகோதரிகளை ஒன்று கூட்டி தலை மீது கைவைத்து செபித்து அவ்வீடுகளுக்கு அனுப்பி வைப்பார்.

### செயல்பாடுகள்

அருட்சகோதரிகள் இருவர் கொண்ட குழுக்களாக ஒரு நாள் 4 வீடுகளை சந்திப்பார்கள். அவ்வீடுகளிலிருந்து உணவு உண்டு அம்மக்களுக்கு இறைவன் தரும் செய்தி என்னவென்று செபித்து விவிலிய அடிப்படையில் அவரவர் தேவைக்கேற்ப மறையுரையை வழங்கி ஆயத்தப்படுத்தி ஆசீர் பெற செய்வார்கள். ஒரு உறவியம் முடியும்போது மாலை வேளையில் அனைவரையும் ஒன்று கூட்டி தியானம் நடத்துவார்கள். மறுபுறம் பங்குத் தந்தை பாவசங்கீர்த்தனம் கொடுப்பார். இறுதியில் ஆசீருடன் முடிவடையும்.



### அடைந்த நன்மைகள்

1. இரவு செபம் இல்லாதிருந்த குடும்பங்களில் ஜெபம் செய்ய துவங்கினர்.

2. பாவசங்கீர்த்தனம் செய்யும் வாய்ப்பு உறவியங்களில் வழங்கியதால் அனைத்து மக்களும் பாவசங்கீர்த்தனம் செய்து நற்றுணை உட்கொண்டனர்.

3. குடும்பங்களில் கணவன், மனைவி, பெற்றோர்கள், பிள்ளைகள் உறவு சீராக்கப்பட்டது.

4. தாங்கள் இவ்வளவு நாட்கள் செய்து வந்த காரியங்கள், தாண்டி வந்த பாதைகள், புரிந்து கொண்ட வசனங்கள் சரியா? தவறா? என ஆத்மசோதனை செய்யவும், விசுவாசத்தை வளர்க்கவும் ஓர் நல்ல வாய்ப்பாக அமைந்தது.

5. நற்செய்தி பெருவிழா நாட்களில் ஒவ்வொரு உறவியங்களுக்கும் மறை உரை வழங்கி மனமாற்றத்திற்கு வித்திட்டனர்.

6. வெளிநாட்டில் பணியாற்றும் குடும்ப உறுப்பினர்களை தொலைபேசியில் தொடர்பு கொண்டு செபம், கவுன்சிலிங் போன்ற விசுவாசப் பயிற்சிகளை வழங்கியதால் அவர்களும் இறை ஆசீரை பெற்றுனர்.

7. பல ஆண்டுகளாக பாவசங்கீர்த்தனம் செய்யாத சிலர் பாவசங்கீர்த்தனம் செய்த நிகழ்வு, பல ஆண்டுகளாக நோய்களால் அவதிப்பட்டவர்களின் நோய் நீங்கிய அனுபவம் செபிக்க ஆர்வம் இல்லாதவர்கள் செபித்த நிகழ்வு, கத்தோலிக்க விசுவாசத்திலிருந்து பிரிந்து சென்ற சிலர் மீண்டும் திரும்பி வந்த நிகழ்வு இவை அனைத்தும் ஹோம் மிஷனின் சிகரம் எனலாம்.

இறுதி நாளான 14.09.2014 ஞாயிற்றுக்கிழமை காலை 7.30 மணிக்கு திருப்பலியும் பின்னர் பேரருட்தந்தை லூக்கா அவர்களின் தியான உரையும் அருட்தந்தையர்கள் மக்கள் மீது கைவைப்பு செபமும் இறுதியில் மேதகு ஆயரின் நற்கருணை ஆசீரும் நிறைவாக அன்பு விருந்துமாக ஹோம் மிஷன் கோலாகலமாக நிறைவடைந்தது.

பேரருட்.பீட்டர் கிழக்கேல்
பங்குத்தந்தை

## Pope Francis TWEETS



**Pope Francis** @Pontifex Oct 14
O Lord, comfort all those who suffer, especially the sick, the poor and the unemployed.



**Pope Francis** @Pontifex Oct 18
To change the world we must be good to those who cannot repay us.



# ஆயரோடு எம் குடும்பம்

கல்லுவிளை முத் அன்னைத்தெரசா ஆலய மக்கள் அக்டோபர் 22 அன்று ஆயரோடு எம் குடும்பம் என்ற நிகழ்வில்



செபமாலை தொடக்கம், குடும்ப ஆண்டு ஒருங்கிணைப்பு, தீப ஒளித் திருநாள் மற்றும் பங்கின் பத்தாண்டு நிறைவு ஆகிய விழாக்களை கொண்டாடி மகிழ்ந்தனர். ஆயரின் வரவேற்போடு, மக்களனைவரும் கையில் தீப ஒளியை கையில் ஏந்திய பவனியாக சென்று ஆயர் அவர்கள் குத்துவிளக்கேற்றி தொடங்கி வைத்தார். தொடர்ந்து ஒவ்வொரு குடும்பமாக அமர்ந்து 53 மணிமாலை சொல்லி செபிக்க ஒவ்வொரு மணிக்கும் ஏற்கனவே செபமாலை வடிவில் அமைக்கப்பட்ட விளக்கில் ஒவ்வொருவரும் ஒளியேற்றினர். பின்னர்



நடைபெற்ற கலைஇரவில் விவிலிய வினாடி வினா, குடும்ப விளையாட்டு போட்டிகளான கணவருக்கு மனைவி முடி பின்னல், சிறுவர் சிறுமியர் நடனம், தீபஒளி நடனம் போன்றவை நடைபெற்றது. விழாவின் இறுதியில் அனைவருக்கும் அறுசுவை உணவு வழங்கப்பட்டது. இந்நிகழ்வில் மறைமாவட்டச் செயலர் அருட்தந்தை ஆன்றனி, இளைஞர் இயக்குநர் அருட்தந்தை பெலிக்ஸ், அருட்சகோ. அபிலாஷ் மற்றும் கார்மல் சபை அருட்சகோதரிகளும் கலந்துகொண்டனர். பங்குத்தந்தை சஜி அவர்கள் விழா ஏற்பாடுகளை செய்திருந்தார்.

அருட்தந்தை சஜி எலம்பாசேரில்
பங்குத்தந்தை

# கல்விப் பணித்தளம்

**காமராஜ் நகர் திருஇருதய நடுநிலைப்பள்ளி**

காமராஜ் நகர் திருஇருதய நடுநிலைப்பள்ளியில் ஏழாம் வகுப்பில் பயிலும் மாணவி J.S ஷிஞ்சு அவர்கள் மாசு கலந்த நீரை தூய நீராக்கும் திட்டம் என்ற ஆய்வு தலைப்பில் ஆய்வு செய்து மாநில அளவில் புத்தாக்க அறிவியல் ஆய்வு விருதும், தங்கப்பதக்கமும் பெற்று பெருமை சேர்த்துள்ளார்கள். மாணவி மற்றும்



வழிகாட்டிய ஆசிரியை ஷர்மின் அவர்களை பாராட்டி சிறப்பிக்கும் விதமாக 22.09.2014 அன்று மதியம் 2.30 மணிக்கு பள்ளி வளாகத்தில் மறைமாவட்ட அனைத்துப் பள்ளிகளின் தாளாளர் அருட்தந்தை. ஜோன்சிலால் அவர்களின் வரவேற்புரையுடன் பெற்றோர் ஆசிரியர் கழகத் தலைவர் தலைமையில் பாராட்டுவிழா ஆரம்பமானது. சிறப்பு விருந்தினராக குருகுல முதல்வர் பேரருட்தந்தை ஜோஸ் முட்டத்துப்பாடம் அவர்கள் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார். பள்ளித்தாளாளர் பேரருட்தந்தை.றோபின்ஸ், முஞ்சிறை உதவி தொடக்கக் கல்வி அலுவலர் திரு. ஆலிவர் டேவிட், பள்ளி மேலாண்மைக்குழு திரு.குமார், கிராம கல்விக்குழு தலைவர் சிவகுமார், முஞ்சிறை ஊராட்சி ஒன்றிய துணைத்தலைவர் திரு.குமாரதாஸ் ஆகியோர்கள் கலந்துகொண்டு வாழ்த்துரை வழங்கி சிறப்பித்தனர். இறுதியில் தலைமையாசிரியை அவர்கள் அனைவருக்கும் நன்றி கூறினார்.

**ஆய்வுத் தலைப்பு**

மாசு கலந்த நீரை குடிநீராக்குதல்



**ஆய்வுச் சுருக்கம்**

மாசு கலந்த நீரை மணல், சிறு கூழாங்கற்கள், மரக்கரித்துண்டுகள், பஞ்சுத்துணி ஆகியவற்றின் உதவியோடு தூய்மையான சுடுநீராக மாற்றுதல்

விருதுபடைத்த மாணவி மற்றும் வழிகாட்டிய ஆசிரியர் அவர்களுக்கு மறைமாவட்டம் சார்பில் பாராட்டுக்களையும், வாழ்த்துக்களையும் தெரிவித்துக்கொள்கிறோம்.

திருமதி ஜோஸ்பின் மேரி
தலைமையாசிரியை

---

## முதல் திருவிருந்து

பாலப்பள்ளம் கிறிஸ்து அரசர் ஆலயத்தில் திருவிழாவிற்கு ஆயத்தமாக நவம்பர் 1 ஆயர் அவர்கள் தலைமையில் 5 மாணவர்களுக்கு முதல் திருவிருந்து அருளடையாளம் வழங்கப் பட்டது. காலை 9.30 மணியளவில் ஆயரின் வரவேற்புடன் திருப்பலி ஆரம்பமானது. திருவிருந்து திருவழிபாடு புதிய வழிபாட்டு முறைப்படி சிறப்பாக



நடைபெற்றது. குகுருகுல முதல்வர் பேரருட்தந்தை ஜோஸ் முட்டத்துப்பாடம், கிள்ளியூர் பங்குத்தந்தை அருட்தந்தை ஜியோ கூழிக்குன்னேல் ஆகியோர்களும் இத்திருவழிபாட்டில் கலந்து கொண்டனர். பங்குத்தந்தை ஜெஸ்டின் அவர்கள் விழா ஏற்பாடுகளை ஒருங்கிணைத்திருந்தார்கள்.

அருட்தந்தை ஜெஸ்டின் செறுவேலில்,
பங்குத்தந்தை

# விழுது-3

## புனிதஅல்போன்சா திருத்தலம், நாகர்கோவில்

நாகர்கோவிலில் வாழ்ந்து வந்த சீரோமலபார் கிறிஸ்தவர்களை ஒருங்கிணைத்து அருட்தந்தை டாமியன் துருத்துமலையில் CMI அவர்கள் 1985 ஜனவரி 26 ம் நாள் திருப்பலி ஒப்புக்கொடுத்தார்கள். அவர்களின் ஆன்மீக காரிங்களை அவர் கவனித்துவந்தார். மக்களின் வேண்டுகோளின்படி சங்ஙனாச்சேரி உயர் மறைமாவட்டப் பேராயர் மார் ஜோசப் பௌவத்தில் அவர்கள் ஒரு ஆலயம் அமைக்க அனுமதி வழங்கினார். கன்னியாகுமரி மிஷன் ஒருங்கிணைப் பாளராக இருந்த பேரருட்தந்தை மாத்யு




வாக்கேல் அவர்கள் முத்திப்பேறுபெற்ற அல்போன்சா பெயரில் ஒரு ஆலயம் கட்டி 1989 செப்டம்பர் 10ம் நாள் அர்ச்சித்தார்கள். 1986ல் முத்திப்பேறுபெற்ற அல்போன்சா பெயரில் 1989ல் ஆலயம் கட்டியது இறைச்சித்தமே. முதல் பங்குத்தந்தையாக அருட்தந்தை மாத்யு குழிஞ்ஞாலில் அவர்கள் நியமிக்கப்பட்டார்கள். அவருக்குப்பின் 1992 முதல் அருட்தந்தை மாத்யூ ஓடலானி அவர்கள் பணியாற்றினார்கள். 1993 முதல் அருட்தந்தைதாமஸ் பௌவத்துப்பறம்பில் அவர்கள் பணியாற்றி வருகிறார்கள். அருட்தந்தை பீட்டர் கிழக்கேல், அருட்தந்தை ஜோசப் தெக்கேக்கடுமத்தில், அருட்தந்தை தாமஸ் குழிகோடில் ஆகியோர் துணைப் பங்குதந்தையர்களாக பணியாற்றினார்கள். தற்பொழுது



அருட்தந்தை சனில்ஜாண் பந்திச்சிறைக்கல் துணைப் பங்குதந்தையாக பணியாற்றி வருகிறார்கள். இவ்வாலயம் தொடங்கப்பட்டது முதல் புனித அல்போன்சாவின் நினைவுநாளான ஜூலை மாதம் 28ம் நாள் திருவிழா கொண்டாடப்பட்டுவருகிறது.

**புனித அல்போன்சா திருத்தலம்:**

முத்திபேறுபெற்ற அல்போன்சாவிற்கு 2008 அக்டோபர் 12ம் நாள் திருத்தந்தையால் புனிதர் பட்டம் வழங்கப்பட்டது. அதற்கு நன்றித் திருப்பலி செலுத்த கோட்டாறு, மார்த்தாண்டம், தக்கலை மறைமாவட்ட கத்தோலிக்க மக்களும் பிறரும் 8.11.2008 ல் இவ்வாலய வளாகத்தில் கூடினார்கள். அவ்விழாவில் கலந்து கொண்ட மதுரை உயர் மறைமாவட்ட பேராயர் மேதகு பீட்டர் பெர்னாண்டோ அவர்கள் புனித அல்போன்சா ஆலயத்தை திருத்தலமாக அறிவித்தார்கள். அதுமுதல் இவ்வாலய விழாக்கள் மிகச்சிறப்பாக கொண்டாடப்பட்டு வருகிறது.



மறைமாவட்டத்தின் பல பகுதிகளிலிருந்தும் மக்கள் திரளாக கலந்துகொள்கிறார்கள். இளைஞர்கள் திருவிழா காலத்தில் நடைபயணமாக வந்து இறையருள் பெற்றுச் செல்கிறார்கள்.

**துணை நிறுவனங்கள்:**

இவ்வாலயத்தின் கீழ் செயல்படும் பிரான்சிஸ்கன் கிளாரிஸ்ட் கன்னியர்கள் தையற்பயிற்சி அளிப்பதோடு மாணவியர் விடுதியையும் நடத்தி வருகிறார்கள். பருத்திவிளை நற்கருணை ஆராதனை சபையினர் மனவளர்ச்சி குன்றிய மாணவர்களுக்கு பயிற்சி அளிக்கின்றனர். சரக்கல்விளையில் பிரான்சிஸ்கன்

அருட்சகோதரர்கள் மாட்ரிஸ் தொழிற்பயிற்சி பள்ளியையும், மெட்ரிக் பள்ளியையும் நடத்தி வருகிறார்கள்.

**பக்த சபைகள்:**

புனித வின்சென்ட் தே பவுல் சபை, மாதர் ஜோதிஸ், மிஷன்லீக், குழந்தை ஈசோ இயக்கம், இளைஞர் இயக்கம் ஆகியவை மூலம் பல்வேறு நலத்திட்ட உதவிகள் ஏழை எளிய மக்களுக்கு செய்யப்பட்டுவருகிறது.

தக்கலை மறைமாவட்டம் 1996 ல் உருவானது முதல், முதல் ஆயர் மார் ஜார்ஜ் ஆலஞ்சேரிஅவர்களின் ஆதரவும் வழிகாட்டலும் இவ்வாலய வளர்ச்சிக்கு உறுதுணையாக இருந்தது. தற்போது ஆயர் மார் ஜார்ஜ் ராஜேந்திரன் அவர்கள் இத்திருத்தல வளர்ச்சிக்கு பெரிதும் உழைத்து வருகிறார்.

பேரருட்தந்தை **தாமஸ் பௌவத்துப்பறம்பில்**,
பங்குத்தந்தை.

---

## ஆயர் இல்ல அலுவலகம் அர்ச்சிப்பு

ஆயர் இல்ல பணியார்களுக்காக நவீன வசதிகளுடன் புனரமைக்கப்பட்ட ஆயர் இல்ல அலுவலகம் அக்டோபர் 29 அன்று ஆயர் அவர்களால் அர்ச்சிக்கப்பட்டு திறக்கப்பட்டது. இந்நிகழ்வில் மறைமாவட்டச் செயலாளர் அருட்தந்தை ஆன்றணி, பொருளாளர் மாத்யூ முளங்ஙனாசேரி, அருட்சகோ. அபிலாஷ், ஆயர் இல்ல பணியாளர்கள் மற்றும் கார்மல் சபை அருட்சகோதரிளும் கலந்து கொண்டனர்.





# வரலாற்றுச்சுவடுகளில்-7

## நம்பிக்கை ஆலயம்

மனவளர்ச்சி குன்றிய மாற்றுத்திறனாளிகளுக்காக தக்கலை மறைமாவட்ட சமூக சேவை இயக்கத்தால் கழுவன்திட்டை பகுதியில் இயக்கப்படும் சிறப்புப் பள்ளியே நம்பிக்கை ஆலயம். 1998 ஆகஸ்டு 15 அன்று தொடங்கப்பட்ட இப்பள்ளி தற்போது இரண்டு மாடி கட்டிடத்துடன் 5 வகுப்பறைகள், அலுவலகம், பணியாளர் அறை, பல்வேறு வகை புத்தகங்கள் மற்றும் கற்றல் கருவிகளுடன் கூடிய நூலகம், ஊஞ்சல், சறுக்கு விளையாட்டுடன் கூடிய பூங்கா வசதிகளுடன் சிறப்பாகச் செயல்பட்டு வருகிறது. 29 மாணவர்களும், 27 மாணவிகளுமாக மொத்தம் 56 மாற்றுத்திறனாளிகள் பயின்று வருகின்றனர்.

### நோக்கம்

மனவளர்ச்சி குன்றிய மாணவர்கள் சமூகத்திற்கோ, பெற்றோர்களுக்கோ சுமையல்ல. அவர்களுக்குள் மறைந்திருக்கும் மாற்றுத்திறன்களை சிறப்புப் பயிற்சிகள் வழியாக வெளிக்கொணர்ந்து நல்ல குடிமக்களாக வாழவேண்டும் என்பதை நோக்காகக்கொண்டு செயல்பட்டு வருகின்றது. இச்சிறப்புப்பயிற்சிகள் அதற்காக வடிவமைக்கப்பட்ட சிறப்புப் பொருட்கள், கற்றல் கருவிகள் மூலமாக மாற்றுத்திறனாளிகள் தங்கள் அன்றாட தேவைகளை பூர்த்தி செய்யும் வண்ணம் வழங்கப்பட்டு வருகின்றது. மாணவர்கள் தங்களின் வயது மற்றும் மனவளர்ச்சி நிலை ஆகியவற்றின் அடிப்படையில் பிரிக்கப்பட்டு உறுதி-கொள்கை, சாதரணம்-கடினம், அருகில்-தொலைவில், குறிப்பிட்ட-பொதுவான, தெரிந்தவை-தெரியாதவை போன்ற பல்வேறு கொள்கைகளின் அடிப்படையில் வகுப்புகள் நடத்தப்படுகின்றன.



ஆசிரியர் குழு

சிறப்புப்பயிற்சி பெற்ற 6 ஆசிரியர்களும், 4 அலுவலகப் பணியாளர்களும், பிசியோதெரபி, கைவினை மற்றும் நடன ஆசிரியர்களுமாக 14 ஆசிரியர்கள் பணியாற்றி வருகின்றனர்.

பயிற்சிகள்

தொடக்க முன் நிலை - தன் அன்றாட தேவைகளை சமாளித்தல்

தொடக்க நிலை - பெயர், சாதாரண எழுத்துக்கள் எழுதுதல், படித்தல்

இடைநிலை - படித்தல், எழுதுதல், சாலை விதிகள், பணப் பரிமாற்றம்

தொழில் முன்நிலை - ஒழுக்கம், நன்னடத்தை, சுயப்பரிசோதனை

தொழில் நிலை - பூக்கள், மேசைவிரிப்பு, பொம்மை, அலங்காரப் பொருட்கள், அணிகலன்கள், வைரக்கல் பதித்தல் போன்ற தொழில்கள் செய்தல்.

உடற்கல்வி

மாணவர்கள் தங்கள் உடல்நலனை சீராக ஆரோக்கியமாக வைக்க உடற்கல்விப் பயிற்சிகள் வகுப்புகள் வாரியாக தினமும் நடத்தப்படுகிறது. யோகா பயிற்சியும் வழங்கப்படுகிறது.

விளையாட்டு

பள்ளி வளாகத்தில் சிறப்பாக அமைக்கப்பட்ட மைதானத்தில் கிரிக்கெட், கபடி, கால்பந்து, கைப்பந்து, கூடைப்பந்து பேட்மின்டன், உயரம் தாண்டுதல், நீளம் தாண்டுதல் போன்ற வெளியரங்கு விளையாட்டுகளும் கேரம், செஸ் போன்ற உள்ளரங்கு விளையாட்டு பயிற்சிகளும் வழங்கப்பட்டு வருகின்றது.

சமையல்

மாணவர்கள் தாங்களாகவே தங்கள் தேவைகளோடு அன்றாட வேலைகளை செய்வதற்காகவும், பெற்றோர்கள் மற்றும் சமூகத்திற்கு உதவியாக இருப்பதற்காகவும் இப்பயிற்ச்சி



நடத்தப்படுகிறது. சுத்தம் செய்தல், பாத்திரம் கழுவுதல், உணவு பரிமாறுதல், டீ காபி போடுதல், காய்கறிகள் நறுக்குதல் போன்ற சமையல் பயிற்சிகளும் உணவுப் பொட்டலங்கள் பரிமாறும் பயிற்சிகளும் வழங்கப்படுகிறது.

இசைப்பயிற்சி

ஹார்மோனியம், தபேலா, கப்பாஸ், ஜால்றா, ஜிஞ்ஜரா, பேங்கோஸ் போன்ற இசைப்பயிற்சிகளும், நடனப்பயிற்சிகளும் வழங்கப்படுகிறது. கல்வியில் ஆர்வமிக்க மாணவர்களுக்கு சிறப்புக்கல்விப் பயிற்சிகளும் வழங்கப்பட்டு வருகின்றன.

மருத்துவம்

மூன்று மாதத்திற்கு ஒருமுறை மருத்துவப் பரிசோதனைகள் நடத்தப்பட்டு லேசான நோய்களுக்கு மருந்துகள் வழங்கப்படுகிறது. மற்ற நோய்களுக்கான ஆலோசனைகள் பெற்றோருக்கு தெரிவிக்கப்படுகின்றது.

சுற்றுலா

ஆண்டிற்கு இருமுறை மாணவர்கள் சமுதாய சிந்தனைகளையும், மாற்றங்களையும் தெரிந்து கொள்ள சுற்றுலா அழைத்துச்செல்லப்படுகிறார்கள். மேலும் விளையாட்டு, கலைப்போட்டிகள், விழாக்களுக்கும் அழைத்துச் செல்லப் படுகிறார்கள்.

பெற்றோர் ஆசிரியர் கழகம்

மூன்று மாதத்திற்கொருமுறை பெற்றோர் ஆசிரியர் கூட்டமும், மாதமொருமுறை ஆசிரியர் கூட்டமும் நடத்தப்பட்டு பள்ளி, மாணவர்கள் திறன், வளர்ச்சி, முன்னேற்றம் பற்றி ஆலோசிக்கப்படுகிறது. காலாண்டிற்கொருமுறை நோக்கம், குறிக்கோள்கள் பற்றி மதிப்பீடு செய்யப்படுகிறது.

இதற்காக உழைத்து வருகின்ற ஆசிரியர்கள், பெற்றோர்கள், நன்கொடையாளர்கள் அனைவருக்கும் நன்றி. மேன்மேலும் இந்நிறுவனம் சிறப்புடன் இறைபணியாற்றிட இறைவனிடம் வேண்டுவோம்.

இவண்,
தலைமையாசிரியை